2 Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மங்கள நிகழ்வுகளுக்கு மங்களகரமான ஸ்தாபனம்
முற்றிலும் நவீனமயப்படுத்தி, குளிரூட்டப்பட்ட காட்சியறை

குமரகுருபுடவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 புரட்டாதி- 06 ஹிஜ்ரி 1428 சஃபான் 17 (22.09.2005) வியாழக்கிழமை இதழ்:357

## பலாலிக்குள் புலிகள் ஊடுருவலாம்; சோதனை நடவடிக்கைகள் தீவிரம்!

கொழும்பு —

பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் விடுதலைப் புலிகள் ஊடுருவிவிட்டதாகக் கூறி அந்தப் பிரதேசத்தில் பாரியளவிலான சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகப் படைத்தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

கீரிமலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை சயனைட்டுடனும் கைக்குண்டொன்றுடனும் கடற்புலி உறுப்பினர் ஒருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 2 சயனைட் குப்பிகள், வயர்கள் மற்றும் ஒரு கையடக்கத் தொலைபேசி ஆகியவையும் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கீரிமலைப் பகுதியில் கடந்த ஞாயிறு இரவு 11.30 மணியளவில் விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கக்கூடிய இரு இளைஞர்கள் நடமாடியதாகவும் பாதுகாப்புப் படையினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் காங்கேசன்துறையில் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த இராணுவ காவலரணில் இருந்த இரண்டு சாப்பாட்டுப் பொதிகள் காணாமற் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடும் கடற்போரை எதிர்கொள்ளும் வலிமையுடன்

# அடுத்த பாய்ச்சலுக்கு தயாராகிவிட்டோம்!

## கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை



கிளிநொச்சி —

கடும்போரை எதிர்கொள்ளக்கூடிய அளவுக்கு கடற்போர் உத்திகளைக் கற்றுக் கொண்டு அடுத்த பாய்ச்சலுக்குத் தயாராகிவிட்டோம் என்று தமிழீழக் கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

கடற்புலிகளின் தளபதி லெப்.கேணல் நிரோஜன், லெப்.கேணல் நளாயினி, கடற்புலிகளின் துணைத் தளபதி இரும்பொறை ஆகியோரினதும் 10.03.2003 அன்று சர்வதேச கடற்பரப்பில் வீரச்சாவடைந்த கரும்புலி லெப்.கேணல் ரஞ்சன், லெப்.கேணல் கதிர் உட்பட வீரகாவியமான மாவீரர்களின் நினைவாகவும் கடற்படை அணிகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டி நிகழ்வின் பரிசளிப்பு விழாவில் தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

ஏனைய நாடுகளில் போர் நடந்து கொண்டிருந்த இடங்களில் யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தி, நீண்டகாலத்திற்கு போர் ஓய்வை ஏற்படுத்தி, அந்த ஓய்வுகளுக்கு ஊடாக போராடிக்கொண்டிருந்த அந்தப் போராளிகளின் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்துக்கு எதிரான ஹர்த்தால்;

# திருகோணமலை முற்றாக ஸ்தம்பிதம்!



திருகோணமலை —

எட்டுக் கோரிக்கைகளை முன்வைத்து - அரசாங்கத்துக்கு எதிராக பொங்கு தமிழ் ஏற்பாட்டுக்குழுவினரால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த பூரண ஹர்த்தாலால் திருகோணமலை நகரம் முற்றாகச் செயலிழந்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவத்தினரும் அவர்களுடன் இணைந்து ஆயுதக்குழுவினரும் நடத்தி வரும் நிழல் யுத்தத்தை நிறுத்தவேண்டும். பாடசாலைகளில் இருந்து படையினர் உடனடியாக வெளியேற்றப்படவேண்டும். விடுதலைப் புலிகளை அரசியல் பணிகளுக்கு மீளவும் அழைப்பதற்கு அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தல் ஆகியன உள்ளிட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)



## அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு நாடாளுமன்றம் அங்கீகாரம்!

## அவசரகால சட்ட மசோதாவை

## ராணுவ ரோந்து அணி மீது

## அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு நாடாளுமன்றம் அங்கீகாரம்!

கொழும்பு —

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கு நாடாளுமன்றத்தில் நேற்று அங்கீகாரம் பெறப்பட்டது.


பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ண சிறி விக்கிரமநாயக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்தப் பிரேரணைக்கு ஆளும் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவாக வாக்களித்தன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த அதேவேளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் தி.மகேஸ்வரன், மேல் மாகாண மக்கள் முன்னணியின் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அவசரகால சட்ட மசோதாவை கிழித்து வீசினார் மகேஸ்வரன்!

## நாடாளுமன்றில் நேற்று பரபரப்பு



கொழும்பு —

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தின் போது - ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் பாதுகாப்பு அமைச்சின் ஆவணங்களையும், அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணையையும் கிழித்து வீசினார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது.

அங்கு பேசிய ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான தி.மகேஸ்வரன், தனக்கு இந்த விவாதத்தின்போது பேச வாய்ப்பளிக்காததைக் கண்டித்தார்.

கொழும்பிலும் இதர பகுதிகளிலும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ ரோந்து அணி மீது மட்டக்களப்பில் தாக்குதல்!

## நான்கு பேர் படுகாயம்

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - இருதயபுரத்தில் கால் நடையாக ரோந்து சென்ற படையினர் மீதும், பொலிஸார் மீதும் இனந்தெரியாத நபர்கள் நடத்திய கிரனேட் தாக்குதலில் 3 படையினரும் 1 பொலிஸ் கொன்ஸ்டபிளும் படுகாயமடைந்தனர்.

நேற்று நண்பகல் 12.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

மட்டக்களப்பு நகரிலிருந்து 2 கிலோமீற்றர் தொலைவிலுள்ள இருதயபுரச் சந்தைப் பகுதியில் கால் நடையாக கூட்டு ரோந்து சென்ற பொலிஸ் மற்றும், இராணுவ அணி மீதே கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் (12 ஆம் பக்கம் பார்க்க)


# கல்மடு கிராம அலுவலர் நேற்றிரவு படுகொலை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - வாழைச்சேனைப் பிரதேசத்தில் கிராம அலுவலகரொருவர் நேற்றிரவு அவரது வீட்டிற்கு அருகில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார்.

இனந்தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தின்போதே இவர் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தில் மேலும் இரண்டு பொது மக்கள் காயமடைந்து வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கல்மடு கிராம அலுவலரான ஜீவா எனப்படும் 54 வயதுடைய அழகரட்ணம் ஜீவரட்ணம் என்பவரே கொல்லப்பட்டவராவார். அத்துடன் விநாயகபுரம் வாசிகளான பாலசிங்கம் ஈஸ்வரலிங்கம் (வயது 48), இராசநாயகம் (12 ஆம் பக்கம் பார்க்க)



## 'பல்டி' அடித்தது ஹெல உறுமய

# மதமாற்றத் தடைச்சட்டத்தை அமுல்படுத்தக் கோருகிறது!

கொழும்பு —

மதமாற்றத் தடைச் சட்டம் தொடர்பான தமது நிபந்தனைகளை விலக்கிக்கொள்வதாக அறிவித்த ஜாதிக ஹெல உறுமய - திடீரென தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு தேர்தலுக்கு முன்னர் அதைச் சட்டமாக்க வேண்டுமென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விடம் கோரியுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை பௌத்த பிக்குகளின் கூட்டமைப்பான ஜாதிக சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த சுமார் 1000 இற்கும் மேற்பட்ட பிக்குகள், பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் கூடி இந்தச் சட்ட மூலத்தைக் கொண்டுவரவேண்டுமென அரசாங்கத்தை வலியுறுத்தினர்.

முன்னதாக (12 ஆம் பக்கம் பார்க்க)

# உரிமை பிரகடனத்தை உலகுக்கு உணர்த்த பொங்கு தமிழுக்கு அணி திரளுங்கள்!

## யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை அழைப்பு

யாழ்ப்பாணம் —

தமிழரின் இறைமையையும், சுதந்திரப்போரையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கக்கோரி வவுனியா தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு வலுவும், உரமும் ஊட்டும் வகையில் யாழ்.குடாநாடு தழுவிய முறையில் நடைபெறவிருக்கின்ற தமிழர் உரிமைப் பிரகடனத்தில் அனைத்துத் தமிழ் பேசும் மக்களையும் கலந்துகொண்டு எங்களது உண்மையான, உறுதியான உணர்வுகளை எழுச்சியுடன் ஓங்கி ஒலிக்கச் செய்வோம் வாரீர்! என யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை அறைகூவல் விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியத்தின் விடிவுக்கான பாதையில் நாம் இன்று முக்கிய கட்டத்துக்கு வந்துள்ளோம். போர், அரசியல், இராஜதந்திரம் அனைத்துமே ஒட்டுமொத்தமாக தமிழ்த் தேசியத்தின் பலத்தின் வெளிப்பாடே, இவ் மூன்றிலுமே தமிழீழ விடுதலைப்புலிகள் தமது உணர்வை வெளிப்படுத்தியுள்ளனர். எனவேதான், தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ்த் தேசிய இனத்தின் ஏக பிரதிநிதிகளாக உயர்ந்து நிற்கிறார்கள். இதை சர்வதேசம் நன்கு புரிந்துள்ளது.

சிங்களப் பேரினவாதத்தை மையப்படுத்திய அரசியல் கலாசாரமோ, நிரந்தர சமாதானத்துக்கான இணக்கப்பாட்டை எட்டுவதற்கு தொடர்ந்தும் தடைகளை ஏற்படுத்திவருகிறது. கடந்த கால, அண்மைக்கால பேரினவாத வரலாற்றின் தொடர்ச்சியே இந்தத் தடைகள், அரசியல்வேடங்கள். ஆனால், இன்று சர்வதேச சமூகம் தமிழ்த் தேசியத்தின் அபிலாஷைகளை கூர்ந்து நிதானமாக கவனிக்கிறது.

தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய வாழ்வுரிமைக்கான நியாயப்பாட்டை சந்தேகமின்றிப் புரிந்துகொள்ள இந்தவேளையில் உறுதிப்படுத்த வேண்டியவர்கள் நாம். தமிழ் பேசும் மக்களின் கருத்தொருமைப்பாட்டின் அவசியம், அதன் உறுதிப்படுத்தல் சர்வதேசத்தின் கண்ணோட்டத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தவல்லவை, எனவேதான், அனைத்து நிலைமைகளையும் எமக்கு சாதகமாக்குவோம். தேசியம், தாயகம், தன்னாட்சி உரிமையே நிரந்தர, நீடித்த சமாதானத்துக்கு வழிகோலும்.

இவையே எமது பிறப்புரிமை, வாழும் உரிமை என்பதையும், இவை எமது அரசியல், சமூக, பொருளாதார இலட்சியமென்பதையும் கோடிட்டுக் காட்டும் நேரமும், காலமும், களமுமாகும்.

எமது நிலத்தில், எமது பலத்தில், எமது தலைவிதியை நாமே தீர்மானித்துக் கொள்ளும் சூழ்நிலையை உருவாக்குவோம். அந்த உன்னதமான, சுதந்திரமான இலட்சிய வாழ்வை நோக்கி தமிழ் பேசும் மக்கள் தேசிய தலைமையின் கீழ் அணி திரண்டு விட்டோம். இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தில் எமது உரிமையை சர்வதேச சமூகம் மீட்டுத்தராவிட்டால் போரின் மூலம் நாம் அதனை வென்றெடுக்க உயர்தர்மத்தையும், நீதியையும், நியாயத்தையும் கொண்ட தேசிய விடுதலைப் பயணத்தில் அர்ப்பணிப்புடன் பயணிப்போம். தமிழ் தேசியத்தின் இலக்கினை உறுதி செய்வோம். வரவை வாங்கிய வரலாற்றில் இடம் பெறுவோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விவசாய கால்நடை கண்காட்சி இன்றுடன் நிறைவடையவுள்ளது

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட விவசாய திணைக்களமும், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து நடத்திய கால்நடை கண்காட்சி கடந்த செவ்வாய்க்கிழமை முதல் திருநெல்வேலி விவசாயபயிற்சிப்பாடசாலை, செயற்கை முறை சினைப்படுத்தும் நிலையம் ஆகியவற்றில் நடைபெற்று வருகிறது.

கால்நடை அபிவிருத்தி தொடர்பான கண்காட்சியில் யாழ்.மாவட்டத்தில் ஆடு வளர்ப்பு, பசு வளர்ப்பு, கோழி வளர்ப்பு பற்றிய விளக்கங்களும், செயற்கை முறை சினைப்படுத்தல், ஒருங்கிணைந்த பண்ணை முறைமைகளும் ஆகிய செயற்பாடுகள் பற்றியும் விளக்கப்படுத்துகிறது.

விவசாயம் தொடர்பான கண்காட்சியில் நீர் முகாமைத்துவத்தின் அவசியமும், தூறல் நீர்ப்பாசன முறை சம்பந்தமான விளக்கங்களும், நவீன விவசாய முறைகளும் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

இந்தக் கண்காட்சி இன்று வரை நடைபெற உள்ளதாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# கிணற்றில் வீழ்ந்து சிறுவன் மரணம்

வடமராட்சி —

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கு அருகிலுள்ள வயல்வெளியில் விளையாடிக் கொண்டிருந்த பாடசாலைச் சிறுவன் வயலிலுள்ள பாழடைந்த கிணற்றினுள் தவறி விழ்ந்து பரிதாபகராமாக உயிரிழந்தார்.

நேற்று மதியம் 11.30 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் கரவெட்டி தெற்கைச் சேர்ந்தவரும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி தரம் 07 இல் கல்வி பயில்பவருமான ஆழ்வாப்பிள்ளை பரமநாதன் (வயது 12) என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது - கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி தற்போது விடுமுறையில் இருப்பதால் அந்தப் பாடசாலையில் நடைபெற்ற பகுதிநேர வகுப்பில் கலந்து கொண்டுவிட்டு பாடசாலைக்கு அருகிலுள்ள வயல்வெளியில் சக மாணவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சமயம் பின்பக்கமாக ஓடிச் செல்லும்போது தவறி வீழ்ந்ததாக தெரியவருகிறது.

இவருடைய சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு அங்கு பதில் நீதிவான் ந.தங்கராசா மரண விசாரணைகளை நடத்தினார். நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சிறுவனின் சடலத்தை உறவினர்களிடம் கையளித்தனர். (12),(14)

# நாகர்கோவில் பாடசாலை மீதான வான் தாக்குதல் நினைவுநாள்

வடமராட்சி —

நாகர்கோவில் மகாவித்தியாலயத்தின் மீது புக்காரா விமானங்கள் குண்டு வீசியதில் இருபதுக்கு மேற்பட்ட மாணவர்கள் உடல் சிதறி கொடூரமாக கொல்லப்பட்ட பத்தாம் ஆண்டு நினைவு தினம் இன்று நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நாகர்கோவில் மகாவித்தியாலய அதிபர் மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கொல்லப்பட்ட மாணவச் செல்வங்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள், திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

1995 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 1 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கொடூர குண்டு வீச்சில் அந்தப் பாடசாலையில் கல்விகற்றுக் கொண்டிருந்த சுமார் 25 மாணவர்கள் உடல் சிதறிப் பலியாகினர். பொதுமக்கள் 10 இற்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். பலர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர். (122)

# இறுதி ஆட்டம்

சங்கானை —

இளவாலை அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் வெண்புறா விளையாட்டு கழகம் நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு இளவாலை வெண்புறா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (72)

# பெண்களுக்கான கலந்துரையாடல்

சண்டிலிப்பாய் —

மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறையும், அதற்கான சட்ட ஆலோசனையும் என்ற தலைப்பிலான கலந்துரையாடல் இன்று சண்டிலிப்பாய் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல்- தற்போது பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறைகள் தொடர்பாக சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காக நடத்தப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடலின் முக்கிய வளவியலாளர்களாக சட்டத்தரணி பவானி சற்குணராஜா, மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன், சண்டிலிப்பாய் கிராம அலுவலர் நித்தியானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சிறுவிளம்பரம்


### காணி விற்பனை

உரும்பிராய் வடக்கில் ஊரெழு மின்சாரநிலைய வீதிக்கு அண்மையில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது. பாதை உண்டு, நியாயமான விலை எதிர்பார்க்கப்படும், தரகர் வேண்டாம். தொடர்புக்கு :- 077-9235991. (2067)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
மணிகண்டன், சிம்ரன், ஜெய்ஆகாஷ் மற்றும் பலர் நடித்த
கிச்சா வயது 16
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா
காட்சி நேரம் : (பி.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஜெய்ஆகாஷ், பிரணவி,நாசர், தாமு, வையாபுரி மற்றும் பலர்நடித்த
குருதேவா
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பி.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
ரவிகிருஷ்ணா, கோபிகா, பிரகாஷ்ராஜ், ரேவதி மற்றும் பலர் நடித்த
பொன்னியின் செல்வன்
காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
2ஆவது ஜனத்திரள் வாரம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு -
நியூ புகழ் - எஸ்.ஜே.சூர்யா, நிலா





அன்பே ஆருயிரே
இசை - A.R. ரகுமான்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்
பி.நே: 10.30, 2.30, 6.30, 9.30


# வழிகாட்டல் கருத்தரங்கு

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு III, இலங்கை அதிபர் சேவை 2 II இலங்கை அதிபர் சேவை3 ஆம் வகுப்பு, இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு I ஆகியவற்றுக்கான பதவி உயர்வு பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர் இராமநாதன் கல்லூரி, வதிரி திருஇருதயக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இன்றும், நாளையும் பி.ப.3மணி தொடக்கம் 5 மணி வரை பதிவு செய்துகொள்ளலாம். கொக்குவிலிலுள்ள சங்க அலுவலகத்தில் சனிக்கிழமை காலை 8மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்கூட்டியே பதிவுகளை மேற்கொண்டால் அச்சடித்த குறிப்புக்களை வழங்க இலகுவாக இருக்கும். புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களும் பங்குபற்றி தமது வாண்மை விருத்தியை வளர்த்துக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நல்லூர் உற்சவ காலத்தில் தவறவிடப்பட்ட பொருட்கள் வழங்கல்

யாழ்ப்பாணம் —

நல்லைக்கந்தன் உற்சவகாலங்களில் அடியார்களால் கண்டெடுக்கப்பட்டு உற்சவகாலப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்ட கைக்கடிகாரங்கள், மோட்டர் சைக்கிள் மற்றும் துவிச்சக்கரவண்டி திறப்புகள், வீட்டுத் திறப்புகள், காற்சங்கிலி மற்றும் தேசிய அடையாள அட்டைகள் போன்றவற்றை நல்லூர் இந்து விடுதியிலுள்ள மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

680340293 V - இ.தவராஜ் (கச்சேரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்), 091201717 E - நகுலேஸ்வரன் சந்திரவதனி (2 ஆம் வட்டாரம் எழுவைதீவு), 565221914 V - இரத்தினசிங்கம் அன்னலெட்சுமி (சின்னடம்பன் நெடுங்கேணி), 537846747 V - புஸ்பலட்சுமி எட்வட்ஜோன் (கலடியன் வீதி, பெரிய கல்லாறு மேற்கு), 0908028372 - சுப்பிரமணியம் ஆர்த்தியான் (கந்தமுருகேசனார் வீதி, புலோலிதெற்கு), ஆறுமுகம் விசுவலிங்கம் (பள்ளமடு), வி.பிரசன்னா (பூந்தோட்டம் நலன்புரிநிலையம்), 091202572 கந்தசாமி சரஸ்வதி (6 ஆம் வட்டாரம், வேலணை தெற்கு), 860363372 V - விசுவலிங்கம் பிரசன்னா (41/04, மானிப்பாய்), 342930255 V - கணபதி தம்பிஜயா (பத்தமேனி, வலி.கிழக்கு)

மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம்- என்பீ.ஜீ.கியூ.2240 - கே.கிருஸ்ணகுமாரி (உரும்பிராய்), டபிள்யூ.ஜீ.1472 - எஸ்.ரீ.கோபாலசிங்கம்(மட்டக் களப்பு), ஏ.366425 - ரி.கெஸ்றொன், (861562867 V தேசிய அடையாள அட்டை) போன்றவையே கண் டெடுக்கப்பட்டு மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## நமது ஈழநாடு

### மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை - இலக்கிய போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிகளுக்கான விதிகள்

**சிறுகதை மற்றும் கவிதைப்போட்டி**

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதை யாவும் தெளிவான எழுத்தில் எழுதப்பட்டோ தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் தட்டச்சில் 6 பக்கங்களுக்குள்ளும் இருப்பது நல்லது.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 50 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:- இந்தப் போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி**

மேற் பிரிவு

தலைப்பு - தமிழ் மாணவர்களின் கல்வியும்... வெகுசனத் தொடர்பு ஊடகங்களும்.

மத்திய பிரிவு

தலைப்பு - தமிழ் மாணவர்களும் வாசிப்புப் பழக்கமும்

### நிபந்தனைகள்

- கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- கட்டுரைகள் ஆகக்குறைந்தது 1500 சொற்களுக்கு குறையாமலும் 2000 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.
- கட்டுரையை தேர்ந்தெடுப்பதில் நடுவர் குழுவினது தீர்ப்பே இறுதியானது.

ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 25.09.2005

போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரிகள்:

கலை இலக்கிய கட்டுரைப்போட்டி
"நமது ஈழநாடு"
267 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு பணிமனை
யாழ்.சாலை
கிளிநொச்சி.




டிஜிற்றல் போட்டோ கொப்பி
$A_4$ - கறுப்பு வெள்ளை - 3.00 ரூபா
$A_4$ - கலர் - 40.00 ரூபா
(சி/4609)
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லப்
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# மதமாற்ற தடைச்சட்ட நிபந்தனையை ஜாதிக ஹெல உறுமய தளர்த்தியது!



கொழும்பு—

மதமாற்ற தடைச்சட்டத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றில் கொண்டுவர வேண்டுமென விதித்த நிபந்தனையிலிருந்து ஜாதிக ஹெல உறுமய பின்வாங்கியுள்ளது.

ஹெல உறுமயவின் இந்த வேண்டுகோள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் பலத்த பாதிப்பை ஏற்படுத்துமென பெயர் குறிப்பிட விரும்பாத கத்தோலிக்க பாதிரியார் ஒருவர் கொழும்பு இணையத்தளமொன்றுக்கு தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அடுத்த ஜனாதிபதியாக வருவதற்கு தம்மாலான எவ்வித ஆதரவும் வழங்கப்படமாட்டாதென ஏனைய கட்சிகள் தெரிவித்ததையடுத்து, தாம் இந்த வேண்டுகோளை கைவிடுவதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜாதிக ஹெல உறுமயவுடன் செய்துகொண்ட உடன்படிக்கை தொடர்பாக சிறுபான்மை மத நிறுவனங்கள் குறிப்பாக கத்தோலிக்கர்கள் மற்றும் ஏனைய கிறிஸ்தவர்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாலியவெவவில் வைத்து கைதான இளைஞர்கள் விளக்கமறியலில்!

கொழும்பு—


புத்தளம் - அநுராதபுர வீதியில் உள்ள சாலியவெவவில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நான்கு தமிழ் இளைஞர்களும் நேற்று முன்தினம் மீண்டும் புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அதனையடுத்து இவர்களை எதிர்வரும் 4 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சிலாபத்தில் இருந்து வாகனம் ஒன்றில் அநுராதபுரம் நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் கடந்த மே மாதம் 21ஆம் திகதி இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து ஒரு கைத்துப்பாக்கி கைப்பற்றப்பட்டது.

இதேவேளை, இந்த வழக்கு விசாரணையை முன்னிட்டு நேற்று முன்தினம் புத்தளம் நீதிமன்றத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (01)

# தேர்தல் விதிமுறைகளுக்கு மாறான பதாகைகளை அகற்றுமாறு பணிப்பு!



கொழும்பு—

தேர்தல் விதிமுறைகளை கண்டிப்பாக நடைமுறைப்படுத்த தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதி தேர்தல் நவம்பர் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, தேர்தல் விதிமுறைகளுக்கு எதிராக வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்களின் சுவரொட்டிகள், உருவப் படங்கள் உள்ளிட்டவற்றை அகற்ற பொலிஸாருக்கு தேர்தல் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

வெளிப்படையான, சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்காகவே இத்தகைய தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் சுவரொட்டிகள் உள்ளிட்டவற்றை அகற்றும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் இந்தக் காலத்தில், சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் பணியில் 65 ஆயிரம் பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வன்முறையற்ற தேர்தலை நடத்துவதற்காக மேலதிக பொலிஸாருடன், முப்படையினரும் விரைவில் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

# போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பணிப்பாளரை மாற்ற முயற்சி!

கொழும்பு—

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பணிப்பாளரான ஆனந்த ஹெட்டியாராச்சியை அந்தப் பதவியிலிருந்து நீக்கி வடக்கு - கிழக்குக்கு இடமாற்றம் செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக பொலிஸ் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரியின் பணிப்பாளராக கடமையாற்றிவந்த ஹெற்றியாராச்சி கடந்த ஜுலை மாதம் 10 ஆம் திகதி போதைப்பொருள் தடுப்புப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

கொழும்பிலுள்ள பிரபல ஹொட்டேலொன்றில்பிரதியமைச்சரின் மகனுக்கும், போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கும் இடையில் முறுகல் தோன்றியதும் ஹெற்றியாராச்சியின் இடமாற்றத்துக்குப் பின்னரே என்பது குறிப்பிடத்தக்கது.

# தனிநபர் என்ற ரீதியில் மஹிந்தவுக்கு ஆதரவு!

## வாசுதேவ அறிவிப்பு




கொழும்பு—

நிபந்தனைகள் இல்லாமல் தனிப்பட்ட நபர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்கவுள்ளதாக புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய என்பன சுனாமி பொதுக்கட்டமைப்பை ரத்துச்செய்வது உட்பட தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் குறித்து பிரதமருடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் தவறானவை.

என்றாலும் தமது கட்சியின் மத்தியகுழு நேற்றுமுன்தினம் கூடி ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்ததாக வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.

# 25 அரசியல் கட்சிகளின் ஆதரவு தனக்கு இருக்கிறதென்கிறார் மகிந்த



கொழும்பு—

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட பதிவுசெய்யப்பட்ட 25 அரசியற் கட்சிகள் தமக்கு ஆதரவை வழங்குவதாக உறுதியளித்துள்ளதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றும்போது-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் சமூகத்தினர் எனக்கு ஆதரவை வழங்கவுள்ளனர். தற்போது 127 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னுடன் உள்ளனர். இந்த நிலையில் ஐ.தே.கட்சி வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது.

தவறான பிரசாரங்கள் மூலம் என்மீது சேறு பூசுகிறது. நிதியமைச்சர் சரத் அமுனுகமவுக்கும், எனக்குமிடையே பிரச்சினைகள் உள்ளதாக புரளி கூறப்பட்டுள்ளது. நியூயோர்க்கிற்கு செல்வதற்கு முன்னர் கூட நிதியமைச்சர் என்னுடன் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடினார்.

அத்துடன், எனது குடும்பம் ஐ.தே.கட்சி தலைமையகமான சிறிகோத்தாவிற்கு செல்ல முயற்சிகளை மேற்கொண்டுவருவதாகவும், பொய்யான தகவல்கள் பரப்பப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மஹிந்தவின் பாதுகாப்பு பிரிவுக்கு புதிய அதிகாரி ஒருவர் நியமனம்!

கொழும்பு—

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பிரிவுக்கு பொலிஸ் அதிகாரி எஸ்.எம்.விக்கிரமசிங்க பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

குற்றச் செயல்கள்,குற்றச் செயல்கள் பற்றிய தகவல்கள், போதைப்பொருள், சிறுவர் மற்றும் மகளிர் விவகாரங்களுக்கு பொறுப்பேற்றிருந்த விக்கிரமசிங்க கடந்த திங்கட்கிழமை காலை புதிய பதவியைப் பொறுப்பேற்றார்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அதை எதிர்கொள்ளும் வகையில் வருங்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்களைப் பலப்படுத்துவதற்காகவும், இப்புதிய நியமன உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவித்தன.

மஹிந்தவின் பாதுகாப்புப் பிரிவில் பொலிஸ் மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகள் உள்ளனர். இவ்விரு பாதுகாப்பு பிரிவுகளையும் சேர்ந்த வீரர்களை ஒரு அதிகாரியின் கீழ் கொண்டுவரும் நோக்கிலேயே பிரதமர் பாதுகாப்புப் பிரிவுக்கு பொறுப்பாக விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ அரசிடம் போதிய நிதியில்லையாம்

## குறை நிரப்பு பிரேரணை சமர்ப்பிப்பு

கொழும்பு—

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவென நாடாளுமன்றத்தில் குறைநிரப்புப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

நிதி அமைச்சரின் சார்பில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இந்தப் பிரேரணையை சமர்ப்பித்தார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக வரவு செலவுத் திட்டத்தின் ஒதுக்கீடுகள் போதாமை காரணமாக இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் அடிப்படையில் 58 ஆயிரத்து 621 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகத் தெரிவித்த அவர், அதில் 25 ஆயிரத்து 513 மில்லியன் ரூபா வெளிநாட்டு நிதிகள் மற்றும் உதவிகள் மூலம் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, வரவு - செலவுத் திட்ட நிதிகள் உரிய வகையில் பயன்படுத்தப்படாமையே இதற்கான காரணமென குறிப்பிட்டார்.

கடந்த ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக்காலத்தில் ஒரு முறை மாத்திரமே குறைநிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (01)

## சோமாலியாவில் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட

# கப்பல் கப்டன் மகாலிங்கம் 2 வாரங்களில் நாடு திரும்புவார்

கொழும்பு—

சோமாலியாவில் கிளர்ச்சியாளர்களால் கடத்தப்பட்ட ஐ.நா உணவுத் திட்டத்துக்கு உதவிப் பொருட்களை கொண்டு சென்ற கப்பல்- தற்போது விடுவிக்கப்பட்டு கென்யாவின் மும்பாஸா துறைமுகம் நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

11 வாரங்களாக கிளர்ச்சியாளர்களால் தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்தக் கப்பல், கடந்த வாரம் விடுவிக்கப்பட்டது. இதையடுத்து கென்யாவின் மும்பாஸா துறைமுகம் நோக்கி பயணமாகும் இந்தக் கப்பலின் கப்டனான பருத்தித்துறையைச் சேர்ந்த மகாலிங்கமும், ஏனைய மாலுமிகளும் நலமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் கப்டன் மகாலிங்கம் அடுத்த 2 வாரங்களுக்குள் கொழும்பு திரும்புவார் என வெளிவிவகார அமைச்சின் அதிகாரியான சாவித்திரி பாண பொக்கே தெரிவித்தார்.

அடுத்தவாரம் கப்பல் மும்பாஸா துறைமுகத்தைச் சென்றடைந்ததும் - கென்யாவிலுள்ள இலங்கைத் தூதுவர் மகாலிங்கத்தைச் சந்தித்து அவரை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட்; இந்திய அணி 318 ஓட்டங்கள்!



ஹராரே

முதல்நாள் ஆட்டத்தில் சிம்பாப்வே அணியை இர்பான் பதான் அதிவேகமாக 161 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கச் செய்த பின்னர் இந்திய அணி களமிறங்கியது.

கௌதம் கம்பீரும், விரேந்தர் ஷேவாக்கும் தொடக்க வீரர்களாக ஆட்டத்தைத் தொடங்கினர். ஷேவாக் பவுண்டரிகளாக அடித்து ஓட்டங்களைக் குவித்தார். கம்பீரும் நிதானமாக ஆடினார்.

ஸ்கோர் 75 ஆக உயர்ந்தபோது ஷேவாக் ஆட்டமிழந்தார். இவர் 44 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 44 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து கம்பீருடன் ராவிட் இணைந்தார். இருவரும் இணைந்து இந்திய அணியின் ஸ்கோரை வேமாக உயர்த்தினர். கம்பீர் 95 ஓட்டங்களுடன் இருந்த நிலையில் முதல்நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

அப்போது இந்திய அணி 1 விக்கெட் இழப்புக்கு 195 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் தொடங்கப்பட்டபோது ஸ்கோர் 198 ஆக இருந்தபோது கம்பீர் பரிதாபகரமாக ஆட்டமிழந்தார்.

சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட இவர் 131 பந்துகளில் 17 பவுண்டரிகளுடன் 97 ஓட்டங்களை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து ராவிட்டுடன் லக்ஸ்மன் இணைந்தார். ஸ்கோர் 219 ஆக



இருக்கும்போது 8 ஓட்டங்களுடன் லக்ஸ்மன் பவிலியன் திரும்ப நேரிட்டது.

அடுத்துக் களமிறங்கிய கப்டன் கங்கூலியும் மந்த கதியிலேயே ஆடினார். ஸ்கோர் 245 ஆக இருந்தபோது கங்கூலியை - மவயெல்கா வீழ்த்தினார்.

50 பந்துகளை எதிர்கொண்டு 2 பவுண்டரிகளுடன் 16 ஓட்டங்களை மட்டுமே எடுத்த கங்கூலி பவிலியன் திரும்பியதைத் தொடர்ந்து - யுவராஜ் சிங் மைதானத்துக்குள் நுழைந்தார்.

ஆனால், அவரும் ஸ்கோர் 302 ஆக இருந்தபோது விக்கெட்டைப் பறிகொடுத்தார். 70 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் யுவராஜ் சிங் 25 ஓட்டங்



களை எடுத்தார்.

தொடர்ந்து ராவிட்டுடன் முரளி கார்த்திக் இணைந்துகொண்டார். ஆனால், ஸ்கோர் 306 ஆக இருந்தபோது ராவிட் பரிதாபகரமாக சதமடிக்கும் வாய்ப்பைப் பறிகொடுத்து ஆட்டமிழந்தார்.

மகாவிரின் பந்துவீச்சில் போல்டான ராவிட் 237 பந்துகளில் 14 பவுண்டரிகளுடன் 98 ஓட்டத்தைக் குவித்தமை குறிப்பிடத்தக்கது.

இவரையடுத்து கார்த்திக்குடன் பதான் இணைந்தாலும் ஒரேயொரு ஓட்டத்துடன் முரளி கார்த்திக் பவிலியன் திரும்பியபோது ஸ்கோர் 318 ஆக இருந்தது.

நேற்று தேநீர் இடைவேளையின்போது இந்திய அணி 7 விக்கெட் இழப்புக்கு 318 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

## சுண்டுக்குளி சனசமூக நிலைய

# சைக்கிளோட்ட, மரதனோட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோர்!

யாழ்ப்பாணம்

சுண்டுக்குளி சனசமூக நிலையத்தின் 77ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, நடத்தப்பட்ட ஆண், பெண் இருபாலருக்குமான, சைக்கிள் ஓட்டப்போட்டிகள், மரதன் ஓட்டப் போட்டிகளின் பெறுபேறுகள் வருமாறு-

ஆண்களுக்கான 30 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டப்போட்டியில் 1 ஆம் இடத்தை கிறீன் கிங்ஸ் விளையாட்டுக்கழக வீரர் என். ஞானசேகரன், 2 ஆம், 3 ஆம் இடங்களை முறையே சுண்டுக்குளி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த வீரர்கள் ஆர். றதீஸ்கரன், ஏ.செல்வா -

பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் 1 ஆம் இடம் - வை. உஷாலினி, 2 ஆம் இடம் - வை. சாலினி, 3 ஆம் இடம் - எல்.வினோஜா-

ஆண்களுக்கான 15 கிலோமீற்றர் மரதன் ஓட்டப்போட்டி யில் 1 ஆம் இடம் - ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தைச் சேர்ந்த வீரன் க.ஜெயதாஸ், 2 ஆம் இடம் - கிறீன்கிங்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஏ.கவிராஜ், 3 ஆம் இடம் - பாரதி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த யு.ரதீஸ்வரனும் பெற்றுக்கொண்டனர்.

# சுப்பர் சீரிஸ் தொடரில் சச்சின் விளையாடமாட்டார்

## வைத்திய நிபுணர் அறிவிப்பு

மும்பை

அவுஸ்ரேலியாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள சுப்பர் சீரிஸ் கிரிக்கெட் தொடரில் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் விளையாடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய கிரிக்கெட் சங்கத்தின் வைத்திய நிபுணர் ஆனந்த கோஷி கருத்துத் தெரிவிக்கையில் -

சச்சின் டெண்டுல்கர் டெனிஸ் எல்போ பிரச்சினையில் இருந்து குணமடைந்துவிட்டார். ஆனாலும் சில உள்ளூர் போட்டிகளில் ஆடிய பின்னரே அவர் சர்வதேச போட்டிகளில் கலந்துகொள்வார் எனத் தெரிவித்தார்.



# விளையாட்டு

# அவுஸ்ரேலிய வீரர்கள் நால்வர் அணியிலிருந்து அதிரடியாக நீக்கம்

## தப்பித்தார் பொண்டிங்




சிட்னி

ஆஷஸ் தோல்விக்கான களையெடுப்புத் தொடங்கிவிட்டது. அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை - ஐ.சி.சி. உலக லெவன் தொடருக்கான அவுஸ்ரேலிய அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

மத்யூ ஹைடன், டேமியன் மாட்டின், ஜேசன் ஜிலெஸ்பி, மைக்கல் கஸ்பரோவிச் ஆகியோர் அணியிலிருந்து அதிரடியாக வெளியேற்றப்பட்டனர்.

ஆஷஸ் தோல்வி தொடர்பாகக் கடும் விமர்சனத்துக்குள்ளான கப்டன் ரிக்கி பொண்டிங் மட்டும் தப்பித்தார். மற்றைய நான்கு வீரர்களும் அதிரடியாக வெளியேற்றப்பட்டனர். ஜேசன் ஜிலெஸ்பி, மைக்கல் கஸ்பரோவிச் இருவரும் அணியிலிருந்தே விரட்டப்பட்டனர். மத்யூ ஹைடன் மற்றும் மாட்டினுக்கு கொஞ்சம் அதிர்ஷ்டம் இருக்கிறது. டெஸ்ட் அணியில் ஹைடன், ஒரு நாள் போட்டிக்கான அணியில் மாட்டின் ஆகியோர் தங்கள் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டனர்.

ஐ.சி.சி. உலக லெவன் அணிக்கு எதிராக மூன்று ஒருநாள் போட்டி, ஒரு டெஸ்ட் கொண்ட தொடரில் அவுஸ்ரேலிய அணி அடுத்த மாதம் விளையாடவுள்ளது. இதற்கான அணியை சிட்னி நகரில் நேற்று அறிவித்த அவுஸ்ரேலிய தேர்வுக் குழுவின் தலைவர் டிரெவர் ஹான்ஸ் - ஆஷஸ் தொடரில் கிடைத்த முடிவுகள் அணியை சீரமைக்கவேண்டியதன் அவசியத்தை உணர்த்திவிட்டன.

2007 உலகக் கிண்ணத் தொடரை மனதில் வைத்துக்கொண்டு ஷோன் டெய்ட், ஷேன் வட்சன், பிராட் ஹொட்ஜ், ஜேம்ஸ் ஹோப்ஸ் போன்ற இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அணியில் மேலும் பரிசோதனை முயற்சிகள் செய்யப்படும் என்றார்.

அணியின் விபரம்:-

டெஸ்ட் - ரிக்கி பொண்டிங் (கப்டன்), அடம் கில்கிறிஸ்ட் (துணைக் கப்டன் - விக்கெட் காப்பாளர்), மத்யூ ஹைடன், ஜஸ்டின் லாங்கர், மைக்கல் கிளார்க், சைமன் கடிச், பிரெட் லீ, ஸ்டுவர்ட் மெக்கில், கிளென் மெக்ரா, ஷோன் டெய்ட், ஷேன் வோன், பிராட் ஹொட்ஜ் மற்றும் ஷேன் வட்சன்.

ஒரு நாள் தொடர்:- ரிக்கி பொண்டிங் (கப்டன்) அடம் கில்கிறிஸ்ட் (துணைக் கப்டன் - விக்கெட் காப்பாளர்), மைக்கல் கிளார்க், நதன் பிராக்கென், பிராட் ஹொக், ஜேம்ஸ் ஹோபஸ், சைமன் கடிச், மைக்கல் ஹஸ்ஸி, பிரெட் லீ, டேமியன் மாட்டின், கிளென் மக்ரா.

## உதைபந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம்

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணியளவில் இளவாலை யங்கென்றீசியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜீவகன் விளையாட்டுக் கழகமும் -

பிற்பகல் 4.30 மணியளவில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

# பங்களாதேஷுடனான 2 ஆவது டெஸ்ட்; வெற்றிபெறும் நிலையில் இலங்கை அணி!



கொழும்பு

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் கொழும்பு சரவணமுத்து மைதானத்தில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்காளதேஷ் அணி தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களை எடுத்ததனால் பலோ ஒன் நிலையில் இருந்து இரண்டாவது இனிங்ஸை விளையாடிவருகின்றது.

முன்னதாக நேற்றுமுன்தினம் தனது முதல் இனிங்ஸில் 7 விக்கெட் இழப்புக்கு 449 ஓட்டங்களைப் பெற்றிருந்த இலங்கை அணியில் வாஸ் 61, முரளி 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இவர்கள் இருவரும் நேற்று தமது ஆட்டத்தை தொடர்ந்தவேளை முரளி 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன்பின்னர் வாஸுடன் - பெர்னாண்டோ இணைந்தபோதிலும் அணி 457 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் வாஸ் 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் இலங்கை அணி 9 விக்கெட் இழப்புக்கு 457 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியதாக அறிவித்தது.


பங்காளதேஷ் பந்துவீச்சாளர்களில் ரசல் மற்றும் ஹிசைன் இருவரும் தலா 4, அப்ரப் அகமட் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து பங்காளதேஷ் தனது முதல் இனிங்ஸைத் தொடங்கியது. எனினும் இலங்கை அணியின் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் பங்களாதேஷ் வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அந்த அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் 34 உதிரி ஓட்டங்களாகும். அந்த அணி சார்பாக நபீஸ் 5, ஹபிபுல் பசார் 18, ஜாவிட் ஓமர் 18, நபீஸ் இக்பால் 5, மொகமட் அஷ்ரபுல் 42, அப்ரப் அகமட் 23, காலித் மசூத் 26 ஓட்டங்களை குறிப்பிடும்படியாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் டில்கார பெர்னாண்டோ 5, முரளி 3, மலிங்க 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து பலோ ஒன்னுக்குத் தள்ளப்பட்ட பங்களாதேஷ் அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் தனது



இரண்டாவது இனிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றிருந் தது.

இதில் ஜாவிட் ஓமர் 9, ஹபிபுல் பசார் 10, நபீஸ் இக்பால் 30, நபீஸ் 51 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். மொகமட் அஷ்ரபுல் 21, ஹிசைன் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் டில்கார பெர்னாண்டோ 2, வாஸ் மற்றும் முரளி இருவரும் ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளனர்.

# கங்கூலியின் கருத்துக்கு டெண்டுல்கரும் எதிர்ப்பு!

மும்பை

அணியில் வீரர்கள், நிர்வாகிகள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் விடயங்களை, வெளியில் பகிரங்கமாகச் சொல்வது தவறான செயலென இந்திய கிரிக்கெட் கப்டன் கங்கூலியின் செயலை சச்சின் டெண்டுல்கர் கண்டித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட்டில் சமீபத்தில் சார்ச்சையைக் கிளப்பினார் கங்கூலி. கப்டன் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்ளுமாறு பயிற்சியாளர் கிரேக் சப்பல் என்னை வற்புறுத்தினார், என்று பகிரங்கமாகப் பேட்டி கொடுத்தார்.

இந்த விடயம் சலசலப்பை ஏற்படுத்தியது. சிம்பாப்வேயில் இருந்து அணி நாடு திரும்பியதும் இது சம்பந்தமாக ஆலோசனை நடத்த கிரிக்கெட் சபை முடிவுசெய்திருக்கிறது.

இது தொடர்பாக டெண்டுல்கரிடம் கேட்கப்பட்டபோது -

இந்தக் கேள்விக்கு பதிலளிப்பது, கொஞ்சம் கடினமான விடயம். ஆனாலும், நீங்கள் கேட்பதால் சொல்கிறேன். அணியில் வீரர்கள், நிர்வாகிகள் தங்களுக்குள் ஆயிரம் விடயங்கள் பேசிக்கொள்வார்கள். அதெல்லாம், வெளியில் பகிரங்கமாகச் சொல்லக்கூடாது.

அப்படிச்சொன்னால், அது நிச்சயமாகத் தவறுதான். ஆடை மாற்றும்



அறையில் பேசிக்கொள்வது, அந்த அறையோடு முடிந்துவிடவேண்டும். அணி நாடு திரும்பியதும், இது குறித்து கிரிக்கெட் சபை நிர்வாகிகள் வீரர்களிடம் பேசவேண்டும் என்றார்.

# சுனாமி மீள்கட்டுமான பணிகளை உயரதிகாரிகள் குழு ஆராய்வு!

யாழ்ப்பாணம் —

சுனாமி மீள்கட்டுமான நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு அண்மையில் யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்த அதிகாரிகள் குழு - சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்ததாக யாழ்.செயலக சுனாமி களநில அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டு சுனாமி மீள்கட்டுமான நடவடிக்கைகள் குறித்து ஆராயும் முகமாக 'ரப்ரன்' அமைப்பின் தலைவர் மனோ தித்தவெல, நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் வடிகால் அமைச்சின் செயலாளர் தேசபால கேவேஜ், சுனாமி வீடமைப்பு மீள்கட்டுமான அலகைச் சேர்ந்த ஜி.அலவத்தேகம, நிறைசேரியைச் சேர்ந்த டொனால்ட் பெர்னான்டோ ஆகியோரே யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு, அரச அதிபருடன் சுனாமி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்தனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயத்துறையை விருத்திசெய்யும் நோக்கில் அப்பகுதிகளில் மண் பரிசோதனை மேற்கொள்ளல் மற்றும் விவசாயிகளுக்கு கடன் திட்டங்கள் வழங்குதல் தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

இவ்வாறே மீன்பிடி தொழிற்துறையை விருத்தி செய்யும் வகையில் பருத்தித்துறை வெளிச்சவீட்டைப் புனரமைத்தல், பல்உபயோக படகுகள் பயன்படுத்துவதற்கான அனுமதி பெறுதல் போன்றன குறித்தும் ஆராய்ந்தனர்.

மேலும், இந்தப் பகுதிகளில் வீடமைப்புத் திட்டங்களை இலகுபடுத்தும் வகையில், வீட்டுத்திட்டங்களை மேற்பார்வையிட தேசிய வீடமைப்பு அதிகாரசபையிலிருந்து 16 தொழில்நுட்பவியலாளர்களை நியமித்தல், மிதிவெடியகற்றல், நிலத்துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளல், வீடமைப்புத் திட்டத்துக்கு கூப்பனுக்கு வவுனியாவிலிருந்து சீமெந்தைப் பெறுதல் போன்றன குறித்தும் ஆராயப்பட்டதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாரதி அனுமதிப் பத்திரம் பெற நடமாடும் சேவை நடத்துக!

## வாகன சாரதிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம் —

நயினாதீவில் சாரதி அனுமதிப்பத்திரம், வாகனப் பத்திரம் பெறுவதற்கு நடமாடும் சேவை நடத்த வேண்டுமென, நயினாதீவில் வசிக்கும் வாகன உரிமையாளர்களும், சாரதிகளும் போக்குவரத்து திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நயினாதீவில் ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள், பஸ்கள் எனப் பல வாகனங்கள் பாவனையிலுள்ளன. ஆனால், வாகனங்கள் செலுத்தும் பலரிடமும் வாகனப் பத்திரமோ, சாரதி அனுமதிப்பத்திரமோ இல்லாத நிலையுள்ளது.

நயினாதீவு மக்கள் பல்வேறு தேவைகளுக்காக யாழ்ப்பாணத்துக்கு வருகின்றபோது, வாகனங்களுக்கு உரிய ஆவணங்கள் இல்லாமலும், சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமலும் இருப்பதால் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக வாகன உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

# பாடசாலை மட்ட கணிப்பீடு குறித்த ஒருநாள் அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம் —

பாடசாலை மட்ட கணிப்பீட்டு வேலைத் திட்டத்தை மேலும் திறம்பட நடத்துவதற்காக அதிபர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கான ஒரு நாள் அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த அறிவுறுத்தல் கூட்டம் - அன்றைய தினம் காலை 8.30 தொடக்கம் மாலை வரை நடத்த பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக்கிளை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதில் கலந்து கொள்பவர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருப்பதோடு, அதிபர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறும் பரீட்சை ஆணையாளர் நாயகம் கோரியுள்ளார். (31)

# தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

அரியாலை —

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கு நிகொட் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தினர் ஒரு தொகை ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

இந்த விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ரி.ஆர்.ஓ தொழில்நுட்ப உத்தியோகத்தர் மதியுகநாதன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன், அரியாலையைச் சேர்ந்த விளையாட்டுக் குழுக்களின் உறுப்பினர்கள், சனசமூக நிலையங்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (55)

# இரத்தவங்கி பிரிவுக்கு வாகனம் அன்பளிப்பு!

யாழ்ப்பாணம் —

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவுக்கு வேள்ட் விஷன் நிறுவனத்தால் பல லட்சம் ரூபா பெறுமதியான வாகனமொன்று வழங்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவு நடமாடும் சேவையை வழங்குவதற்காக - 26 ஆசனங்களைக் கொண்ட முழுமையாக குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் ஒன்றே அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

வேள்ட் விஷன் நிறுவனத்தின் யாழ்.பிராந்திய பொறுப்பதிகாரி, யாழ்.போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளரிடம் நேற்று இந்த வாகனத்தை கையளித்தார்.

## தளபாடங்கள் கையளிப்பு

அரியாலை —

அரியாலை கலைவாணி சனசமூக நிலைய பாலர் பாடசாலைக்கு நிகொட் நிதியுதவியுடன் ரி.ஆர்.ஓ நிறுவனத்தினர் தளபாடங்களை வழங்கியதோடு, சிறுவர் பூங்கா ஒன்றையும் அமைத்துக் கொடுத்துள்ளனர். (55)

# சின்னஞ்சிறு செய்திகள்

## நூலகம் திறந்துவைப்பு

உடுவில் —

மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் புதிதாக மாணவர்களுக்கான நூலகமொன்று கடந்த வாரம் திறந்துவைக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு பொதுக் கல்வித் திட்டம் பகுதி II நிதித் திட்டத்தில் அமைக்கப்பட்ட இந்தப் புதிய நூலகத்தை, உடுவில் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் திறந்துவைத்தார். பாடசாலை அதிபர் நா.சிவநேசன் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. (101)

## ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம் —

தொண்டமானாறு சந்நிதியான் ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆசிரமத்தில் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் - நாளை பிற்பகல் 10.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் 'பெரியபுராணம்' பற்றி ஆன்மீகசொற் பொழிவாற்றுவார். (17)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம் —

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆசிரமத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணி பூசை முடிவடைந்தவுடன் 'ஆழ்வார்கள் காட்டிய அன்பு நெறி' எனும் பொருள் குறித்து வல்வை சிதம்பரா கல்லூரி அதிபர் அ.விஜயநாதன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (17)

## மாபெரும் கண்காட்சி

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் மாகாண மட்டத்தில் நடத்தப்படும் தையல் மனையியல் கணகாட்சி எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் தினமும் காலை 9 மணிமுதல் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (72)

## அரியாலை மக்களுக்கு மலசல கூட உதவி

அரியாலை —

அரியாலை ஜே-94, ஜே-96 கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட பிரதேசங்களில் நிகொட் நிதியுதவியுடன் ரி.ஆர்.ஓ நிறுவனத்தினர் 35 பயனாளிகளுக்கு மலசலகூடம் அமைப்பதற்கு 6 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை வழங்கினர்.

இந்த நிறுவனத்தினர் இந்தப் பிரதேசங்களில் மேலும் 20 பயனாளிகளுக்கு மலசலகூடம் அமைப்பதற்குத் தேவையான பொருட்களை விரைவில் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (55)

## நிழற்பட பிரதி இயந்திரம் அன்பளிப்பு

மட்டுவில் —

வடக்கு - கிழக்கு மாகாண சமூகசேவை திணைக்களத்தால் கைதடியிலுள்ள அரச முதியோர் இல்லத்துக்கு நிழற்பட பிரதி இயந்திரமொன்று வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மேற்படி இல்லத் தேவைகளுக்கு தனியார் கடைகளையும், தென்மராட்சிப் பிரதேச செயலகத்தையும் நாடிச் செல்லவேண்டியிருந்தது. தற்போது இந்த இன்னல் தீர்ந்துள்ளதாக முதியோர் இல்ல அத்தியட்சகர் தெரிவித்தார். (24)

## சனசமூக நிலையத்துக்கு உதவி

அரியாலை —

அரியாலை கலைமகள் சனசமூக நிலையத்துக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவநேசன் தமக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

இந்த நிதி, கடந்த கால யுத்தம் காரணமாக முற்றாகச் சேதமடைந்து, தற்போது கட்டப்பட்டுவரும் பாலர் பாடசாலைக் கட்டடத்துக்கு பயன்படுத்தப் படவுள்ளது. (55)

## தலைமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் இளந்தலைவர் தலைமைத்துவ பயிற்சி இன்று காலை 8.30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர் யாழ்.மாவட்ட செயலக உதவி இயக்குநர் தி.சிவதெட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அரச அதிபர் கே.கணேஸும், சிறப்பு விருந்தினராக யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலய அதிபர் எஸ்.மாணிக்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## வீடமைப்பு கொடுப்பனவு வழங்கல்

யாழ்ப்பாணம் —

உலக வங்கியின் வடக்கு-கிழக்கு மாகாண மீள் வீடமைப்பு திட்டத்தின்கீழ் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 91 பயனாளிகளுக்கு 2 ஆம் கட்ட வீடமைப்பு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக, யாழ். பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.


இந்தக் கொடுப்பனவு மேற்படி பிரிவைச் சேர்ந்த பயனாளிகளுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## பரீட்சைக்கு தோற்றுவோருக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் தர்மாசிரியர் பரீட்சைக்கு தோற்றுவோரின் நலன்கருதி, எதிர்வரும் ஒக்ரோபர் 1, 2 ஆம் திகதிகளில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் - யாழ்.இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கருத்தரங்கு ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் தர்மாசிரியர் பரீட்சைக்குத் தோற்றவுள்ள சுமார் 400 பேர் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.



குருதிக் கொடையாளர்கள் கௌரவிப்பு விழா – நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த விழாவுக்கு விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், அரச அதிபர் க.கணேஸ், வைத்திய கலாநிதி திருமதி ஆர்.எம்.பிந்துசாரா ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும், குருதிக் கொடையாளி ஒருவருக்கு அரச அதிபர் க.கணேஸ் பதக்கம் அணிவிப்பதையும் படங்களில் காணலாம்.

படங்கள் – கரன்

# வடக்கு - கிழக்கு மக்களின் பொருளாதார நிலைமையை மாற்றக்கூடிய கடல் வளம்

இன்று நாம் பல போக்குவரத்துச் சாதனங்களை எங்கள் விருப்பம், வசதிக்கு ஏற்ப பயன்படுத்துகிறோம். அதாவது- தரையில் மோட்டார் சைக்கிள், சைக்கிள்

வணிகன்



ஆகாய பயணத்துக்கு விமானம். இதே போல் கடற்பயணத்துக்குக் கப்பல். ஆனால், நாம் இன்று காணும் தொழில் நுட்பம்- வளர்ச்சியடைய முன்பு, எமது கடல் அன்னை மீதே எமது பாரிய தூர தேச வியாபாரம் நோக்கிய பயணங்கள் அமைந்தன. இதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுவதுடன், தமிழரின் கடல் வளமானது அளப்பரிய சொத்தாக அன்று தொடக்கம் இன்று வரை அமைந்துள்ளது.

இந்தச் சொத்தின் மீது அந்நிய ஆக்கிரமிப்புகள் இற்றைக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பமாகிவிட்டது எனலாம். அதாவது -அரேபியர் வியாபார நோக்கம் கருதி இங்கு வந்து இறங்கியதுடன், கடல் எல்லைக்கான போட்டி ஆரம்பமாயிற்று என்கிறது வரலாற்றுப் பதிவு. ஆனால், இவை ஆரம்பமாவதற்கு முன்பே கப்பல் போக்குவரத்தும், கடல் வளப்பயன்பாடும் தமிழரின் பொருளாதாரத்தில் இணைந்திருந்தது என்பதற்குப் போதிய ஆதாரம் உள்ளது.

இவ்வாறு பொருளாதாரத்தில் ஒரு பகுதியாகக் காணப்பட்ட கடல் வளம் - பாரிய பொருளாதார நன்மைகளையும், நாட்டை நோக்கி கவர்ந்துள்ளது. இதற்கு உதாரணமாக - கடல் சிப்பி, முத்து போன்ற விலையுயர் பொருட்களை பெறுக்கொள்வதில் உள்ள போட்டி மற்றும் இதனைக் காண்பதற்காக வரும் அந்நிய நாட்டுச் சுற்றுலாத் துறையினர் எனப் பலரையும் குறிப்பிடலாம். இவ்வாறான கடல்வளம்- கடந்த கால யுத்த சூழ்நிலையால் பாதிப்புக்குள்ளாகியுள்ளது என்பது மறுப்பதற்கு இல்லை. இதனைச் சீர் செய்வதன் ஊடாகப் பொருளாதார நன்மைகளை நாம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இதன் படி கடல் வளம் - மீன்பிடி, உப்பு உற்பத்தி போன்ற திட்டங்களுக்கே பயன்படுத்துவதுடன், எதிர்காலத்தில் பயன்படுத்த திட்டங்களையும் தயாரிக்கிறோம். ஆனால் கடல் நீரின் பல இரசாயனப் பொருட்கள் நன்னீர் (குடிநீர்) தயாரிப்புப் பற்றி நாம் சிந்திப்பதும் இல்லை. அத்துடன், அதற்கான தொழில்நுட்ப வசதிகள் போதாமலும் காணப்படுகின்றன. இதே போல் கடல் அடிப்பிரதேசத்தில் பல கனிப்பொருட்கள் காணப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. நாம் எமது பிரதேசத்தில் கனிப் பொருட்களைத் தரையில் இருந்து மாத் திரமே பயன்பாட்டுக்குப் பெற்றுக் கொள்கின்றோம். ஆனால், அதனை விட அதிகமாக கடற்பகுதிகளில் காணப்படுவதாக ஆராய்ச்சிகள் கூறுவதுடன், இவற்றைப் பயன்பாட்டுக்கு எடுப்பதில் ஆர்வம் குறைவாகவே காணப்படுகிறது.

இதேபோல் தான் தமிழர் பிரதேசத்தில் காணப்படும் சுற்றுலாத் தளங்கள் என இருபது, இருபத்தைந் தாண்டுகளுக்கு முன் காணப்பட்ட பிரதேசங்கள் விருத்தி செய்யப்படாது அழிவடைந்தும் உள்ளதுடன், பயன் பாட்டுக்கு ஏற்ற பிரதேசமாகக் காணப்படுகின்ற பயமும் உருவாகியுள்ளது. உதாரணமாக கண்ணி வெடிப்பயம் காணப்படுகிறது. இதனால் இவற்றை அப்புறப்படுத்து வதனூடாகச் சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்க முடியும் என எண்ணுவதுடன், இங்கு வசிக்கும் மக்களின் வருமான வாய்ப்பாகவும் அது அமையும் என்பதில் சந்தேகமில்லை. அத்துடன், புதிய முதலீட்டாளர்கள், நிறுவனத்துறையினரின் வருகை அதிகரிப்பதுடன், தொழில் நிறுவனங்கள் உருவாகவும் இது வாய்ப்பாகக் காணப்படும்.

நாம் வரையறுக்கப்பட்ட கடல் எல்லையுடன், எமது வளப்பயன்பாட்டை உச்சமாகப் பயன்படுத்த மீன்பிடித் தொழில் நுட்பம் ஒன்றையே பயன்படுத்துகிறோம். இவற்றுள் பல, பழைய தொழில்நுட்பத்துடன் படகுகள், கருவிகளாகக் காணப்படுகிறது. இவற்றால் அதில் பயன்பாட்டை பெற முடியாததுடன், இவ்வாறு பெறப்படும் மீன்கள் - குளிரூட்டிகள் ஊடாகப் பாதுகாக்கப்பட்டே தெற்குப் பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. இவற்றுக்கு மாற்றீடாக மீன்களைத் தகரத்தில் அடைக்கும் தொழில் நுட்பத்துடன் கூடிய நிறுவனம் நிறுவப்படுமாயின், புதிய தொழில்வாய்ப்பு ஏற்பட வாய்ப்பாகவும் இருக்கும். இந்தத் தொழில்நிறுவனம் வடக்கு - கிழக்குப் பகுதியில் நிறுவப்படுமாயின், அதனூடாகப் பாரிய நன்மையை தொழில்சார்ந்தோர் பெற்றுக் கொள்ள முடியும் என்பது நடைமுறை சார்ந்த உண்மையாகும். (தொடரும்...)


### இது பற்றிச் சிந்திப்போம்...!

தொழில்சார் ரீதியாக – மனிதன்
தனக்குள் தானே வகுத்துக்
கொண்ட ஜாதியென்ற பிசாசைக்
கடவுள் சந்நிதானத்துக்கே
அழைத்துச் சென்று விட்டான்...!

## தொழில்மலரின் சமையல் விருந்து

**மைசூர் பாகு செய்வதெப்படி?**

தொழில்மலரின் சமையல் விருந்து எனும் பகுதியானது - தொடர்ச்சியாக ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு உணவு வகையுடன் தனது வாசகருக்கு வழி



காட்ட உள்ளது. இது குடும்பத்துப் பெண்கள் உட்பட, உணவுத் தொழிலோடு சம்பந்தப்பட்ட அனைவருக்கும் பயனுடையதாக அமையுமென்பதில் ஐயமில்லை. இந்தவாரம் மைசூர்ப்பாகு செய்யும் முறைபற்றி நோக்குவோம்.

**தேவையான பொருட்கள்:**

கடலைமா - 1/2 சுண்டு
சீனி - 1 சுண்டு
நெய் - 150 கிராம்
தண்ணீர் - 1/2 கப்

**செய்முறை:**

☆ சீனியை மெல்லிய கம்பிப்பாகாகக் காய்ச்சவும்.


☆ இதனுள் கடலை மாவை சிறிது சிறிதாகத் தூவி கட்டிபடாமல் கிளறவும்.

☆ முழுவதும் நன்கு கலந்தபின் நெய்யை இடையிடையே சேர்த்துக் கிளறவும்.

☆ சட்டியில் ஒட்டாமல் திரளும் பருவத்தில் இறக்கி நெய்பூசிய தட்டில் கொட்டி, அழுத்திப் பரவவும்.

☆ சூடாக இருக்கும்போதே துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும்.

# மரபுத்தொழில்கள் ஏன் எம்மவர் மத்தியில் மதிப்பிழந்து போகிறது





எமது தமிழ்ப்பாரம்பரியத்தை நிலை நாட்டுகின்ற மரபுத் தொழில்களான நாதஸ்வரம், நட்டுவமேளம், பறைமேளம், தச்சுத் தொழில், சீவல் தொழில், நகைத் தொழில், போன்றன தற்போது எமது சமூகத்தில் வலுப்பெற்ற அர்த்தமற்ற ஜாதிப் பிரிவினைகளால் அடுத்த சந்ததியினருக்குக் கடத்தப்படாது அருகி வருகின்றது. இதனால் எமது நாட்டுக் கென்று தனிச்சிறப்புப் பொருந்தியதும், தெய்வீகத் தன்மை வாய்ந்ததுமான இந்தத் தொழில்களை எமது சமூகம் இனிவரும் காலங்களில் இழக்க வேண்டிய சூழல் ஏற்பட வாய்ப்புண்டு. சிங்கள மக்கள் உட்பட வேறு இனத்தவர்கள் தமது பாரம்பரிய தொழில் துறைசார் கலை அம்சங்களை மேலும் மேலும் வளர்ப்பதில் பல செயற்திட்டங்களை முன்னெடுத்து வரும் அதே நேரம் - யாழ்.சமூகம் உட்பட்ட தமிழர்களாகிய நாம் எமக்குள் நாமே வகுத்துக்கொண்ட ஜாதியென்னும் பிரிவினைகளை கேவலமாகச் சுட்டிக்காட்டி, தனித்துவம் மிக்க கலையம்சங்களை நாமே எமது சமூகத்தில் இல்லாது ஒழித்து வருகின்றோம் என்பதனைத் தொழில் மலர் சுட்டிக்காட்டவிரும்புகிறது. அன்று தொட்டு, இன்றுவரை எமது யாழ்.சமூகம் இப்படிப்பட்ட போலிக் கௌரவங்களைத் தேடியமைதான் கண்ட மிச்சமே தவிர, மற்றவர் முன்னேற்றத்தைப் பார்த்தேனும், தானும் முன்னேறும் சிந்தனை பெரிதாக அருகிவிட்டது

இதனால் தமிழ் தேசத்தின் இறைமையைக் காக்க முன்வந்த தமிழீழ நிறுவனங்களிடம், தொழில் மலர் ஒரு வேண்டுகோளைவிட்டு, அதன் நிறைவேற்றலுக்காக எதிர்பார்த்து நிற்கிறது.

அருகிவரும் எமது தமிழ் பாரம்பரியத்தோடு கூடிய தொழில்சார் கலைகளை இளம் சந்ததியிடம் வளர்க்கப் பொருத்தமான நடவடிக்கையை எடுக்க வேண்டும். இது பலவழிகளில் அமையலாம். பயிற்சிகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், சந்தைப்படுத்தல் வசதிகள் என எதுவாகவும் இருக்கலாம். ஆனால், எமது பாரம்பரிய தொழில்கள் அழிந்து போகாது காக்கப்பட வேண்டும் என்பது தான் தொழில் மலரின் ஆதங்கமாகும்.

# பதவியும், கடமையும்

பதவியைப் பெற நாம் முன்னிற்கும் வேகமானது - அதற்கான கடமையைச் செய்ய முன்னிற்கும் வேகத்தைப் பார்க்கினும் எத்துணை வேக வேறுபாடு கொண்டுள்ளது என்பதைச் சிந்திப்பது நலமான தாகவே இருக்கும். பதவிக்கும், கடமைக்கும் இடையேயான வேகவேறுபாட்டைப் பதவியில் அழகு பெறும் நாம் சிந்திக்கவேண்டியது அவசியமாகும். பெற்ற பதவியின் மதிப்பைக் கூட்டுவதும், குறைப்பதும் எமது நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது என்பதையும் மறந்துவிடக்கூடாது. ஒவ்வொரு பதவிக்கும் உரிய உயரிய கடமை ஒழுங்குகள் உள்ளன. அவற்றைத் தொடர்வதுடன் பதவியின் தரத்துக்கு ஏற்ப எமது ஆளுமை விருத்தியிலும் வேறுபாடு தோன்ற வேண்டியதும் இங்கு வேண்டப்படும் பிரதான நிலைகளாகும். பதவிகளைப் பெற நாம் முன்னிற்பதற்கான காரணங்கள் பலவாக இருப்பினும், பதவியின் சிறப்புகளுக்கு அழகு சேர்க்கும் கடமைகளே வெளிப்படையாக இங்கு பலராலும் எதிர்பார்க்கப்படும் புனித அம்சமாகும்.



பதவிகளைப்பெற எமக்கு உதவி நிற்கும் கல்வித் தகைமைகளைக் குறித்துச் சற்றுச் சிந்திப்போமெனில், அவை கற்றல் மூலம் நாம் பெற்ற ஞாபகசக்தியை அளவிடும் பரீட்சை ஊடாகப் பெற்ற சான்றிதழால் உறுதிப்படுத்தப்படுகிறது.

நாம் கற்றவர் என்பதை உறுதி செய்ய அவை நமக்குத் தேவைப்படுகின்றன. அவை பதவியை நாம் பெறுவதற்குத் துணை நின்றனவே தவிர, பதவியின் கடமைகளை நிறைவேற்றும் ஆற்றலை உறுதிசெய்யவில்லை. பதவிக்கு வந்த பின்னரோ அன்றேல், பதவியில் இருந்தவர்கள் மூலமோ ஒரு பதவியின் கடமைகளைத் தெரிந்து கொள்கிறோம். அப்போதே நாம் எமது பதவியின் சிறப்புகளைப் பேண முன்னின்று உழைக்க முயல்கின்றோம்.

இன்று பதவியில் இருக்கும் ஒவ்வொருவரும் தமது கடமைகள் பற்றித் தெரிந்து கொள்வதுடன், அவற்றை நிறைவேற்றும் வலிமைமிகு ஆளுமையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

பதவியால் அழகு பெற்றுப் பெருமை பேசுவதால் மட்டும் எவரும் எம்மை உயர்ந்தவன் என்று மதிப்பளித்தல் கூடுவதில்லை. பதவியின் அழகு பேணப்படுகிறது. அதன் மூலம் பதவிக்கு அழகூட்டி, அந்தப் பதவியால் எமது அழகுக்கு மெருகூட்டிக் கொள்கிறோம்.

பதவியின் வலிமையால் பதவிக்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்வதும், பதவியின் கடமைகளைப் புறம் தள்ளிச் செயற்படுவதும் பதவியின் சிறப்பைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளாகும். பதவிக்குரிய கடமைகளில் ஆளுமையுடன் ஈடுவடுவதே பதவியின் சிறப்பைப் பேணும் மகத்தான மதிப்புடையதாகும்.


பதவிக்குரிய கல்வித் தகைமை பொதுவாக எதிர்பார்க்கப்பட்டாலும், கல்வித் தகைமைக்கு மேலாக, பதவியின் மதிப்புக்கு ஏற்ற பண்புகளைத் தன்னகத்தே வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வமே மிகவும் வேண்டப்படுவதாகும். தாம் கொண்ட பதவியைப் புகழுக்காகவும், பெருமைக்காகவும் ஒரு சபை நடுவே உயர்ந்தவன் என்ற தோற்றத்துக்காகவும், கருவியாகவும் எண்ணுதல் இன்றைய எம்மவரின் விருப்பாக உள்ளது. அதை நாம் ஏற்றுக்கொண்டாலும், தமது பதவியில் அவர் ஆற்றும் பணிகளின் பால் அவரின் ஈடுபாடும், வேகமும், விவேகமும் சமூகத்தின் நோக்கில் மதிக்கப் படுபவையாகும்.

ஒருவரது கல்வித்தகைமையைச் சொல்லி, அவரது பாடசாலைக் கல்வி அறிவு வளத்துக்கு வலிமை சேர்க்க நாம் முயல்வதும், அவரது தவறுகளுக்கு நியாயம் கற்பிக்க முயல்வதும் பதவியை அவர் தக்கவைத்துக்கொள்ள எடுக்கும் சில உபாயங்களாகும். இன்றைய கல்வித்தேர்ச்சிகளைக் கணிப்பீடு செய்யும் தொடர் கணிப்பீட்டு முறையில் - நாம் ஒருவரது பதவிச் செயற்பாடுகளைப் பரீட்சிப்போமெனின், பதவிக்குப் பொருந்தாத அல்லது பதவியை அவமதிக்கும் எந்தச் செயலையும் அவர் செய்யும் போது தண்டிக்கவும்,

பதவியை மேம்படுத்தும் உயரிய கடமைகளைச் செய்யும் போதும், சமூகத்துக்குப் பயன்தரு• பணிகளில் ஈடுபடும் போதும் அவற்றைப் பாராட்டிச் சன்மானம் வழங்கவும் நாம் முயலுதல் வேண்டும்.

பதவிகளைப் பெறும் தகைமைகளைப் பெறுவோம். கடமைகளைத் தேர்ந்து பதவிகளைப் பெருமைப்படுத்துவோம். ***

## மக்கள் வங்கியின் "குரு சேத" கடன் திட்டம்



ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டோர்க்கு, மக்கள் வங்கி "குருசேத" எனும் கடனுதவியினை வழங்கி வருகிறது. இந்தக் கடனுதவியின் மூலம் ஆசிரியர்கள் சிறு தொழில்களினையும் மேற்கொள்ள முடியும். மேற்படிப்புக்கான மூலதன தொகையாகவும் பயன்படுத்த முடியும். இந்தக் கடனைப் பெற குறிப்பிட்ட ஆசிரியர் கற்பிக்கும் பாடசாலையில் குருசேத சங்கம் உருவாக்கப்பட வேண்டும். ஏற்கனவே இந்தச் சங்கம் பாடசாலையில், இருப்பின் இதில் குறிப்பிட்ட ஆசிரியர் அங்கத்தவராக வேண்டும். குறிப்பிட்ட ஆசிரியரின் சம்பளப்பட்டியலை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று இலங்கை வங்கியில் இருந்து பெறப்பட்ட படிவத்தையும் பூர்த்தி செய்து சம்பளப் பட்டியலுடன் இலங்கை வங்கிக்கு அனுப்பப்பட வேண்டும். இதனைத் தொடர்ந்து அரச ஊழியர்கள் இருவரின் உறுதிப்பாட்டுடன் 150,000/- வரை கடனைப் பெறலாம். இதன் மீளளிப்பு காலம் 3 தொடக்கம் 5 வருடமாகவும் அமையலாம்.

இந்தக்கடன் மூலம் வேறு ஒருவரது சிறுதொழில் ஊக்குவிப்பினையும் முன்னெடுக்க முடியும். இந்தத் தொகைக்கான கடன் மீளளிப்பு வலயக் கல்விப் பணிமனையில் அவரது சம்பளப்பட்டியலில் கழிக்கப்படும்.



# வீட்டுத்தோட்டத்தை வழிப்படுத்தும் தொடர் ஆலோசனை

வீட்டுத் தோட்ட வருமான முன்னெடுப்புக்காக தொழில் மலரானது - தொடர் ஆலோசனையை வழங்க முன்வந்துள்ளது. அந்த வகையில் மண்ணின் தன்மை, விதைகளின் தரம், நாற்று நடும் முறை, நீர்ப்பராமரிப்பு, களை எடுப்பு, உரமிடல், நோய்த் தடுப்பு, செடிவகைக் காய்கறிகள், கொடிவகைக் காய்கறிகள், இலைப் பயிர், கிழங்கு இனம், மர வகைகள், இதர பயிர்கள் எனப் பல விடயங்கள் பற்றித் தொடரும் தொழில் மலர்கள் ஆலோசனைகளை வழங்கும். இன்றைய தொடரில் மண்ணின் தன்மைகள் பற்றி நோக்குவோம்.

**மண்ணின் தன்மையை இனங்காணல்**

மண்ணின் தன்மையும், நீரின் தன்மையும் இடத்துக்கிடம் வேறுபடும். நீங்கள் தோட்டம் அமைப்பதற்கு முன் மண்ணின் தன்மைகளை, வகைகளை நன்கு புரிந்து கொள்ளவேண்டும். பெரிய அளவில் தோட்டம் மேற்கொள்ள விரும்புவோர் மண்ணை, மண் ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பி, பரிசோதனை செய்து கொள்வது நல்லது. ஆராய்ச்சியாளர்கள் உங்கள் தோட்டத்திலுள்ள மண்ணில் என்ன சத்து என்ன விகிதத்தில் உள்ளது. பயிர்களுக்கு எந்த அளவு உரமிட வேண்டும் என்பதைத் தெரிவிப்பார்கள். உங்கள் மண்ணுக்கேற்ற தாவரவகைகளையும் சிபாசு செய்வார்கள்.

பொதுவாக மண்ணில் - களிமண், வண்டல் மண், சரளை மண், உவர் மண், செம்மண் என்று மண்ணை வகையாகப் பிரிக்கலாம். மணற் பாங்கான நிலத்தில் மண்ணின் துகள்கள் அடர்த்தியாக இருப்பதில்லை. முழுக்க முழுக்க மணலான பகுதியில் செடிகள் முழுமையாக வளர்வதில்லை. காரணம்- நாம் பாய்ச்சுகின்ற நீரை மணலானது நெடுநேரம் வைத்துக் கொள்ள முடியாது. தண்ணீர் அடி மண்ணுக்குப் போய்விட, செடிகளுக்கு உணவு கிடைக்காது. அது மட்டுமல்ல, மணலின் சூட்டை செடிகளால் தாங்கிக் கொள்ள முடியாது. இந்த நிலத்தில் செம்மண், பசுந்தாழை, மாட்டுச் சாணம் ஆகியவற்றைக் கலந்து, சத்துள்ள மண்ணாக மாற்றலாம். 'ஆற்று மண்ணுக்கு வேற்று மண்'ணென்று கிராமத்தில் சொல்வார்கள்.

களிமண் மிகவும் கடினமானது. பயிர்கள் இந்தப் பரப்பில் வேர் விடுவது கடினம். கோடையில் வரட்சி தாங்காமல் செடிகள் உலர்ந்து போகும். அதிக அளவு நீர் பாய்ச்சல் வேண்டியிருக்கும். மண்ணை நன்கு உழுது, இரசாயன சத்துக்களை இட்டால் நல்ல பலன் கிடைக்கும். களிமண்ணுடன் - ஆற்றுமண், சாம்பல் கலக்கலாம். சுண்ணாம்புச் சத்துச் சேர்த்தால் கெட்டியான களிமண், இளகல் தன்மையைப் பெற்றுவிடும்.

சரளை மண் என்பது - கல் போன்ற கட்டிகளை அதிக அளவில் கொண்டிருக்கும். அத்துடன், களிமண் சிறிது சேர்க்கலாம். சுண்ணாம்பு, மாட்டுச் சாணம் எருவாகச் சேர்க்கலாம்.

உவர் நீர் கொண்ட இடங்களில் உவர் நீரை மண்ணுக்கு இடவேண்டிய தேவை ஏற்படும். இதனால் மண் உவர் தன்மை பெறும். இதனால் தவாரங்கள் மண்ணிலிருந்து உணவை உறிஞ்சிப் பெறமுடியாத நிலை உருவாகும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நல்ல வடிகாலமைப்பு அவசியம். பசுந்தழை, செம்மண் நன்கு மக்கிய சாண எரு ஆகியவற்றை ஒரே அளவில் கலந்து, கொத்திய நிலத்தில் இட்டு, மண்ணைப் புரட்டி, தலைகீழாக்கிய பின் இந்த மண் மற்ற மண்ணைப் போலவே பலன் தரும்.

வண்டல் மண் சத்துள்ளது. உங்களது தோட்டத்தில் இத்தகைய மண் இல்லை எனில், ஆற்றுப் படுக்கை அல்லது குளத்தில் படிந்த வண்டலை எடுத்து, தோட்டத்தில் போட்டு உங்கள் தோட்ட மண்ணுடன் கலந்துவிடுங்கள். அதிக விளைச்சலுக்கு வண்டல் மண் உதவும்.

மேல் மண், கீழ் மண் என இரு படைகளில் இடையிடையே மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும்.

அதாவது - கொத்திப் புரட்ட வேண்டும். ஏனெனில் மேல் மண்ணில் கழிப் பாகங்கள் இருக்கும். அதன் மேல் நீர் பாய்ச்சினால், நீர் பூமிக்குள் போகாது மேலாக வடிந்து விடும்.

ஆகவே, இந்த மண்ணின் தன்மைகளை இனங்கண்டு, இதற்குப் பரிகாரம் தேடுதலே உங்கள் விளைச்சலின் வெற்றிக்கு முதல்படி.

☆

# விடுதலை உணர்வுள்ள தமிழ் மக்களை எவருமே தோற்கடித்துவிட முடியாது!

## விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன்



கிளிநொச்சி—

தமிழீழ விடுதலைப் போருக்கான இன்றைய மக்கள் அறைகூவல் - தமிழ் மக்களின் விடிவுக்கான அறைகூவலாகும். விடுதலை உணர்வுள்ள தமிழ் மக்களை எவரும் தோற்கடித்துவிட முடியாது என, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போருக்கான தேசிய அறைகூவல் என்ற மாநாட்டில் கலந்து கொண்டு, உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

கடந்த மூன்றாண்டுகளாக தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வருவதாக நினைக்கக் கூடாது. விடுதலை உணர்வுள்ள தமிழ் மக்களை எவரும் ஏமாற்றிவிட முடியாது.

இந்த மூன்றாண்டுகள் தான் வெளி உலகத்துக்கு எமது நிலைமையை தெட்டத்தெளிவாக எடுத்தியம்பியுள்ளது. எமது வெற்றிப்பாதை வெகு தொலைவில் இல்லை.

எமது தேசியத் தலைவரின் தொலைநோக்கும், வழிநடத்தலும் எமது போராட்டத்தின் வெற்றியை எமக்குத் தேடித்தரும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் நகரப் பகுதியில் வீதித்தடை அகற்றப்பட்டது

மன்னார்—

மன்னார் நகரின் மையப் பகுதியில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருந்த வீதித் தடைகள், சோதனை நிலையங்கள் என்பன இராணுவத்தால் அகற்றப்பட்டன.

இந்த வீதித் தடைகளுக்கு மன்னார் பொதுமக்கள் அமைப்புகளின் ஒன்றியம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துவந்தது. பொதுமக்கள் அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் எமிலியன் யூசுப்பிள்ளை தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று, இராணுவத் தளபதி பிரிகேடியர் எஸ்.எம்.டி.ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

இந்தக் கலந்துரையாடலின் போது - வீதித் தடைகள், சோதனைச் சாவடிகள் அதிகரித்து வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரும் இன்னலுக்குள்ளாகி வருவதால் - இவற்றை அகற்றுமாறும், இரவு நேரங்களில் வீடுகளுக்குள் தேடுதல் நடவடிக்கை என்ற பெயரில் அத்துமீறி நுழைவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, வீதித் தடைகளையும், சோதனைச் சாவடிகளையும் அகற்ற இராணுவத் தரப்பு ஒப்புக்கொண்டது. மன்னார் பிரதானவீதி, செபஸ்தியான் வீதி மற்றும் தாழ்வுப்பாடு வைத்தியசாலை ஆகிய பகுதிகளிலுள்ள வீதித் தடைகள் அகற்றப்பட்டன.

இந்தச் சந்திப்பில் எமிலியன் யூசுப்பிள்ளை தலைமையிலான குழுவில் பொதுமக்கள் அமைப்புகளின் ஒன்றியச் செயலாளர் ஜெயபாலசிங்கம், பொருளாளர் மரியதாசன் பீரிஸ், சட்டத்தரணிகள் எம்.எம்.சப்ருடீன், ஜோண்தாசன் மற்றும் பொறியியலாளர் எஸ்.இராமகிருஸ்ணன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# தியாகி திலீபன் நினைவாக அடையாள உண்ணாவிரதம்

துணுக்காய்—

துணுக்காய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தியாக தீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவாக ஐந் தாம் நாள் அடையாள உண்ணா நோன்பு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

துணுக்காய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவன் கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் -பொதுச் சுடரை பாடசாலை அதிபர் தில்லைநாதன் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை கொள்கை முன்னெடுப்புப் போராளி உலக நெஞ்சன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் சசி ஏற்றி வைத்தார். திருவுருவப் படத்துக்கானமலர்மாலையை பாடசாலை உப அதிபர் திருமதி பரமானந்தராஜா அணிவித்தார்.

தலைமையுரையைத் தொடர்ந்து, பாடசாலை மாணவர்களின் திலீபன் தொடர்பான கவிதைகள் மற்றும் நினைவுரைகள் என்பன இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கட்டுமான வேலைகளுக்கு நீர் பெறுவதில் பெரும் சிரமம்

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தேறாங்கண் டல் கிராமத்தில்-நியாப் திட்டத்தால் 25 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதன் கட்டுமான வேலைகளுக்கு நீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இந்தக் கிராமத்தில் வீடுகள் அமைப்பதற்கான வேலைகளுக்கு பவுஸர்கள் மூலம் நீண்ட தூரம்சென்று, நீர்பெற்று வீடுகளை அமைத்து வருகின்றனர். இதற்காக ஒரு பவுஸர் தண்ணீரை 400 ரூபாவுக்கு வீட்டு உரிமையாளர்கள் பெற்று வருகின்றனர்.

# கட்டட திறப்புவிழா

கிளிநொச்சி—

கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### செப்ரெம்பர்-22

**1542:** முதன் முதலாக கடல் கலங்களுக்கான காப்புறுதிப் பத்திரம் வழங்கப்பட்டது. 'சாந்த மரியா' என்ற கப்பல் காப்பீடு செய்யப்பட்டு, அதற்கான காப்புறுதிப்பத்திரம் ஜோன் புரோக் என்பவருக்கு வழங்கப்பட்டது.

**1599:** கிழக்கிந்தியக் கம்பனி உருவாகியது. லண்டனில் ஃபவுண்டர்ஸ் ஹோக் என்னுமிடத்தில் இருபத்திநான்கு வர்த்தகர்கள் கூடி, இந்தியாவில் வர்த்தகம் செய்யும் நோக்குடன் இதனை உருவாக்கினர்.

**1776:** 'தாய் நாட்டுக்காகத் தியாகம் செய்ய எனக்கு ஒரே ஒரு உயிர் மட்டுமே இருப்பதற்காக மிகவும் வெட்கப்படுகிறேன்' என்று கூறித் தூக்குமேடையேறிய அமெரிக்க விடுதலை இயக்க வீரர்களில் ஒருவரான நாதன் ஹேல் தூக்கிலிடப்பட்டார்.

**1916:** பிரிட்டனின் ஒரு நீதிமன்றில் தனது கட்சிக்காரருக்காக, டபிள்யூ.எச்.அப்ஜோண் என்ற வழக்கறிஞர் நாற்பத்தைந்து நாட்களாக நடத்திவந்த வாதத்தை முடித்துக் கொண்டார். உலகிலேயே நீண்ட நாள்கள் நடந்த வாதம் இது எனலாம்.

**1922:** அமெரிக்க காங்கிரஸ் 'கேபிள் சட்டம்' என்ற சட்டத்தை நிறைவேற்றியது. இந்தச் சட்டப்படி, அமெரிக்கரான ஒரு ஆணோ, பெண்ணோ வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்யும்போது, அவர்களும் அமெரிக்க குடியுரிமை பெற்றவர்களாகிவிடுகின்றனர்.

**1924:** 'லூனசி' எனும் முப்பரிமாண பேசும் நகைச்சுவைத் திரைப்படம் - அமெரிக்காவில் திரையிடப்பட்டது.

**1955:** முதன் முதலாக தொலைக்காட்சிகளில் வர்த்தக ஒளிபரப்புத் தொடங்கப்பட்டது. ஏ.பி.பேத் என்பவர் தயாரித்த 'கிப்ஸ் எஸ்.ஆர்' என்ற பற்பசை பற்றிய விளம்பர நிகழ்ச்சி முதன் முதலாக பிரிட்டிஷ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

**1966:** இந்த மாதம் 20ஆம் திகதி அமெரிக்காவால் சந்திரனை ஆராய்வதற்காக அனுப்பிவைக்கப்பட்ட 'சர்வேயர் - 2' என்ற விண்கலம் - சந்திரனின் மேற்பரப்பில் 'கொப்ப நிக்லஸ்' என்ற பள்ளத்தில் விழுந்து நொருங்கியது.

**1980:** மிக நீண்டகாலமாக நடைபெற்ற ஈரான் - ஈராக் போர் ஆரம்பித்தது. இந்த இரு நாடுகளையும் பிரிக்கும் ஷாட் - அல் - அராப் நீர் நிலை காரணமாக கடந்த பத்து மாத காலமாக இந்த இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட முறுகலே போராக வெடித்தது.

**1992:** பிரிட்டனும், இந்தியாவும் - இரு நாடுகளுக்கிடையிலான குற்றவாளிகள், தீவிரவாதிகளைப் பரிமாறிக்கொள்ளும் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டன.

தொகுப்பு - சந்துரு

# முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் 11ஆம் ஆண்டு நிறைவும், நிர்வாகத் தெரிவும்

வவுனியா—

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் 11 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும், புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த சனிக்கிழமை வவுனியா விபுலானந்த கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு - கிளிநொச்சி ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரதிநிதிகள், வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மாவட்டப் பணிப்பாளர், தமிழ், சிங்கள, முஸ்லிம் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரதிநிதிகள், வடக்கு - கிழக்கு மாகாண மூவின முன்பள்ளிகளின் மாவட்ட, வலய இணைப்பாளர்கள், மூவின கட்டமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வு முன்பள்ளிகளை சமூகமயமாக்கும் நோக்குடனும், முன்பள்ளிப் பிள்ளை வளர்ச்சியும் - விருத்தியும் சமுதாயத்தின் வளர்ச்சியில் பெரும் பகுதி தங்கியுள்ளது என்பதைக் கருத்திற்கொண்டே பிரதேச, வலய, மாவட்டம் மூலமாகத் தெரிவுசெய்யப்பட்ட கட்டமைப்பிலிருந்து மாகாணமட்ட கட்டமைப்பு இடம்பெற்றது.



முல்லைத்தீவுப் பிரதேசத்தில் மாவீரர் நிரோஜன் பயிற்சிக் கல்லூரி மைதானத்தில் கடற்புலி மாவீரர்கள் நினைவாக நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் தமிழீழத் தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றுவதையும், போட்டியில் ஒரு காட்சியையும், வெற்றி பெற்ற போராளிகளுக்கு தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை பரிசில்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

நமது ஈழநாடு

வைர வரிகள்

அதிகாரத்தைப் பிடித்திருப்பவர்கள் அதை நீடித்துக்கொள்ளவே விரும்புகிறார்கள்.
யாரோ

## நமது நோக்கு

# செவிடன் காதில்...!

நியூயோர்க்கில் நடைபெற்று முடிந்த உதவி வழுங்கும் இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் - இலங்கைப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு காணப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஆளும் சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ - ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி. ஆகியவற்றின் ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு - அதிகாரப் பரவலாக்கம் கிடையாது என்பன போன்ற நிபந்தனைகளுக்கு இணங்கியிருக்கும் நிலையிலேயே இந்த மாநாட்டில் சமஷ்டித் தீர்வு குறித்து வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்ற கற்பனைக்குள் சிங்களப் பேரினவாத சக்திகள் இன்னமும் மூழ்கிக்கொண்டிருக்கின்ற சூழலில், சர்வதேச சமூகத்திடம் இருந்து - சமஷ்டித் தீர்வு தொடர்பாக வெளிவரும் கருத்து தமிழ் மக்களுக்கு ஆறுதலளிக்கக்கூடியதுதான்.

ஆனால், சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் இலங்கையில் ஒருபோதும் சமஷ்டித் தீர்வை ஏற்படுத்தப் போவதில்லை என்பதுடன், அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டால் அதனை முளையிலேயே கிள்ளியெறித்து விடவும் தயங்கப்போவதில்லை.

இப்போதும்கூட ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமயவுடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஏற்படுத்தியிருக்கும் கூட்டணி வெற்றிபெற்றால், சமஷ்டித் தீர்வு பற்றி எவருமே சிந்தித்துக் கூடப் பார்க்கமுடியாது.

நிலைமை இப்படியிருக்க - சர்வதேச சமூகம் சமஷ்டித் தீர்வு தொடர்பாக இலங்கை அரசுக்கு பாடம் கற்பித்துக்கொண்டிருப்பதானது 'விழலுக்கு இறைத்த நீராகவே' போய்முடியும்.

சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன்தான் கடந்த மூன்றரை ஆண்டுகாலமாக சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மறுக்க முடியாது. ஆனால், 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' கதையாக எதை எதையோ பேசப் போய் - இப்போது தொடங்கிய இடத்துக்கே அது வந்து சேர்ந்துள்ளது.

அதாவது, இப்போது போர்நிறுத்தம் பற்றிப் பேச்சு நடத்தவேண்டிய நிலைக்கு சிங்களதேசம் நிலைமையைக் கொண்டு வந்து விட்டுள்ளது.

இந்த மூன்றரை ஆண்டுகால சமாதான முயற்சிகளை சரியான முறையில் - தமிழ்மக்களுக்கு நீதியான நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் செயற்பட்டிருந்தால் இந்த நெருக்கடி தோன்றியிருக்காதல்லவா?

மாறாக - தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை மழுங்கடித்து - அவர்கள் மீது நிழல் யுத்தத்தைத் தொடுத்து - மீளமுடியாத நெருக்கடிக்குள் அவர்களைத் தள்ள முயற்சித்ததால்தானே இன்று சிங்கள தேசத்திற்கு எதிராக தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு ஆயுதம் ஏந்தும் நிலைக்கு வந்திருக்கின்றனர்.

சமஷ்டித் தீர்வுபற்றி இலங்கை அரசுக்கு ஆலோசனை கூறும் சர்வதேச சமூகம் - அதை அமுல்படுத்தும்படி என்ன அழுத்தத்தை கொடுத்திருக்கிறது? அப்படி அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தால் - சமஷ்டித் தீர்வு வரை சென்றிருக்காவிட்டால் கூட - அதற்கான பயணத்தின் ஒரு பகுதியையாவது இப்போது தாண்டியிருக்க முடிந்திருக்கும்.

ஆனால். சமஷ்டி பற்றி சர்வதேசம் கூறிக்கொண்டிருக்க - நாட்டின் பிரதமரும் அடுத்த ஜனாதிபதி வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ - ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமயவுடன் இணைந்து ஒற்றையாட்சித் தீர்வு பற்றிப் பேசுகிறார் என்றால் -

சர்வதேச சமூகம் குறித்தும் அவர்களின் கருத்துக்கள் தொடர்பாகவும் சிங்கள ஆளும் வர்க்கம் எத்தகைய மதிப்பைக் கொண்டிருக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடிகிறது.

இதுவரை காலமும் ஈழத் தமிழ்மக்கள் சிங்கள தேசத்திடம் இருந்து நீதியானதும், நியாயமானதுமான தீர்வை எதிர்பார்த்து நம்பிக்கையிழந்த நிலையில்தான் தமிழீழத் தேசத்தின் இறைமையை அங்கீகரிக்கக்கோரி நிற்கின்றனர்.


இன்றைய நிலையில் - சர்வதேச சமூகம் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான. சுதந்திரத்துக்கான போராட்டத்துக்கு அங்கீகாரத்தை வழங்குவதே ஈழத் தமிழ் மக்களுக்கு செய்யக்கூடிய ஒரே உதவியாகும்.

ஏனெனில். சமஷ்டி என்று இலங்கை அரசுக்கு இன்னமும் எவ்வளவு காலம்தான் ஆலோசனை கூறினாலும். அவை அனைத்தும் 'செவிடன் காதில் ஊதிய சங்காகவே' போய்முடியும்.

தமிழ்மக்களுக்கு இலங்கைத் தீவில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொண்டிருக்கும் சர்வதேச சமூகம் - இனிமேலாவது அவர்களின் பிரச்சினைக்கு யதார்த்த பூர்வமான தீர்வுக்கு உதவுவதே நல்லது.

இன்று தமிழ்மக்கள் எழுச்சியுடன் தனித் தமிழீழத்தைக் காண தயாராகிவிட்டுள்ள சூழலில். சர்வதேசத்தின் பார்வை, அவர்களின் இறைமைக்கான கோரிக்கையை அங்கீகரிப்பதாக இருப்பதே மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com



நான் ஆத்மரீதியாக உணர்கின்றேன். இன்றில்லாவிட்டாலும், என்றோ ஒருநாள் எனது மக்கள் நிச்சயமாக விடுதலையடைவார்கள்.

*- தியாக தீபம் லெப்.கேணல் திலீபன்-*

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி' பார் பார்வையில்...

# அமெரிக்காவும், ஐரோப்பாவும் பூச்சாண்டிக்கு மசியவில்லை!

"புலிகள் கொலை செய்கிறார்கள், பயங்கரவாதிகள், சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கிறார்கள். உலக நாடுகள் பலவும் புலிகளைத் தடை செய்திருக்கின்றன" என்று எந்நேரமும் சிங்கள, பௌத்த மேலாண்மைவாதிகளும் அவர்களுடைய ஊடகங்களும் ஓயாமல் நச்சரித்துக் கொண்டேயிருக்கின்றன. போதாக்குறைக்கு பைத்தியக்காரன் என்று தமிழ் நாட்டு மக்கள் நிராகரித்துவிட்டிருக்கும் சுப்பிரமணியம் சுவாமி உலகிலுள்ள எல்லா பயங்கரவாத இயக்கங்கள் என்று சொல்லப்படுபவைகளுடன் முடிச்சுப்போட்டு கொழும்புப் பத்ரிகைகளுக்கு கட்டுரை எழுதி சாம்பிராணி போடுகிறார். ஆனால், இந்தப் பேரினவாதிகளினது ஆட்டமும் அந்தச் சாம்பிராணிகளைப் போன்றவர்களின் கொட்டமும் உலக நாடுகளில் எடுபடாமல் போவதைக் கவனித்தீரா என்று சொன்னபடி வந்தமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

கதிர்காமரின் கொலையை வைத்து சந்திரிகா அம்மையாரும் அவரது சகாக்களும் மட்டுமல்ல, கூலிக்கு மாரடிப்பவர்களும் தொடர்ந்து ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சுப்பிரமணியம் சுவாமியும் கடலுக்கப்பாலிருந்தும் கண்ணீர் வடிக்கிறார். இவர்கள் என்னதான் கண்ணீர் வடித்தும் புலிகளைத் தடைசெய்யவேண்டுமென்று சந்திரிகா அரசு கேட்டும், ஐரோப்பிய யூனியன் மறுத்துவிட்டது. இதுமட்டுல்ல, ஐரோப்பிய யூனியனிலுள்ள அங்கத்துவ நாடுகள் தனித்தனியாக இதுபற்றி முடிவெடுக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. எந்த உறுப்பு நாடும் இதுவரை புலிகளைத் தடைசெய்ய முன்வரவில்லை. விடுதலைப் புலிகளை ஐரோப்பிய யூனியன் நாடுகள் தடைசெய்யவேண்டுமென்று சிறிலங்கா அரசாங்கம் ராஜீய ரீதியில் பெரும் முயற்சி செய்துவந்தது. இது வெற்றியளிக்கவில்லை. கதிர்காமரைச் சொல்லிச் சிந்திய கண்ணீர் நீலிக் கண்ணீர் என்பது அந்த நாடுகளுக்குப் புரிந்துவிட்டது என்று சொன்னேன்.

இன்னொரு முயற்சியிலும் சிறிலங்கா இனவாத அரசும் இனவெறி ஊடகங்களும் படுதோல்வியைச் சந்தித்திருக்கின்றனர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் விடுதலைப் புலிகளின் ஓர் அங்கமாகச் செயற்படுகிறது. புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு அது நிதி உதவி செய்து உடந்தையாகவும் செயற்படுகிறது என்று சிறிலங்கா அரசும், அதன் தோழமை அமைப்புகளும், அவற்றின் ஊடகங்களும் பிரசாரம் செய்துவந்தன. பிரிட்டனில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததென்று கொழும்பு ஊடகங்கள் தெரிவித்து இதர நாடுகளிலும் தமிழர் புனர்வாழ்வுக்ழக நடவடிக்கைகளைத் தடைசெய்யவேண்டுமென்று வலியுறுத்திவந்தன. தமிழர் புனர்வாழ்வுக்கழக நடவடிக்கைகளைத் தடைசெய்யவேண்டுமென்று அமெரிக்காவையும் சிறிலங்கா அரச ஊடகங்களும் கேட்டன, வற்புறுத்தின. ஆனால், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமெரிக்காவின் சட்டவிதிகளுக்கு உடன்பட்டுச் செயற்படுவதால், அதைத் தடைசெய்யவேண்டிய அவசியம் எதுவுமில்லை என்று அமெரிக்கா அறிவித்துவிட்டது. பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாத அமைப்புக்கள் பற்றிய தெளிவான நிலைப்பாடு அமெரிக்காவிடம் உள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுவருகிறது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்திருக்கிறார் என்று பரமசிவம் சொன்னார்.

உலக நாடுகளில் விடுதலைப் புலிகளுக்கெதிராக முன்னர் கதிர்காமர் நடத்திய நாடகங்கள் முடிந்துவிட்டன. இனியும் இவை அந்த மேடைகளில் சொல்லமாட்டாதென்பது தெரிந்துவிட்டது என்று சொன்னேன்.

இப்போ கதையே துரிதமாக வேறு திசையில் மாறிக்கொண்டிருக்கிறது. இனிப் பொய்யும் புளுகுகளையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு தமிழ் மக்களின் விடுதலைக்கு எல்லோரும் ஒன்று கூடித் தேர் இழுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு புறப்பட்டார் பரமசிவம்.


நேற்றைய நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாம் பக்கத்தில் சிறுவனின் அறுவைச் சிகிச்சைக்கு உதவுமாறு கோரிக்கை என்று ஒரு உருக்கமான வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்ததைக் கவனித்தீரா என்று பரமசிவம் திரும்பிப் பார்த்துக் கேட்டார்.

பார்த்தேன், தச்சன்தோப்பைச் சேர்ந்த எட்டு வயதுச் சிறுவனுக்கு சிறுநீரக அறுவைச் சிகிச்சை செய்து உயிரைக் காப்பாற்றுவற்கு நிதி உதவி செய்யும்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. போர்க்கால நடவடிக்கைகளால் தந்தையையும் இந்தச் சிறுவன் இழந்துவிட்டான். இதுபோன்ற சிறுவர்கள் பலருக்கு உயிரைக் காப்பாற்றும்படி பத்திரிகைகளில் அநேகமாக தினமும் வேண்டுகோள் விடப்படுவதை பார்த்திருக்கிறேன். நல்ல மனம் படைத்தவர்கள் உதவிக்கொண்டுதானிருக்கிறார்களென்று நினைக்கிறேன். ஆனால், இருக்கும் மண்டபங்களை இடித்துத் தள்ளிவிட்டு இப்போது சிமெந்துக் கட்டடங்கள், மண்டபங்களாகக் கட்டி வர்ணமுலாம் பூசப்படுவதை நாடு முழுவதிலும் பார்க்கிறோம். கல்விக் கூடங்களுக்கு கூடச் செலவுக்கு முன்வராதவர்கள் கோயில் மண்டபங்களைப் புதிது புதிதாகக் கட்டுகிறார்கள். இந்தச் சிறுவனைப்போல் உயிருக்குப் போராடும் சிறுவர்களுக்கு இந்த ஆலயங்களும் ஆலயத் திருப்பணி செய்பவர்களும் உதவி உயிரைக் காப்பாற்றினால் ஆண்டவன் அருள் அபரிமிதமாகக் கிடைக்காதா என்றேன்.


நீர் சொல்வது ஆலய அறங்காவலர்களுக்காவது கேட்கட்டும் என்று பரமசிவமே சொல்லி நடந்தார்.

# தமிழ் இளைஞர்களின் வாழ்க்கைக் கோலத்தின் உண்மைச் சம்பவங்கள் தான் 'சகா' திரைப்படம்









உலகத்தவர்களை வெகுவாகக் கவர்ந்து, ஆதிக்கம் செலுத்திவரும் அதிசக்திமிக்க ஊடகம் தொலைக்காட்சி. வயது, பால் வேறுபாடின்றித் தன் வசீகரத்தால் நாளாந்தம் புதியவர்களை உள்வாங்குவதும், உள்ளீர்க்கப்பட்டோரை உறையவைப்பதும் சினிமாக் கலை தான் என்பதை ஆய்வுக்குட்படுத்தாமலேயே கூறிவிடமுடியும். இந்த வீரியத்தையும், வீச்சையும் தளரவிடாது, தென் இந்திய தமிழ்ச்சினிமாவும் பல கோடி மக்களை தன்னுடனே வைத்துள்ளது. இலகுவாக மக்களைத் திசைதிருப்பி துணிகரமாக ஊடுருவும் ஊடகமாக தொலைக்காட்சியுள்ளது.

சினிமா என்ற கலை வடிவத்தால் எதையும் சாதிக்கலாம் என்ற நிலையை தொலைக்காட்சி ஏற்படுத்தியுள்ளதை அனுபவரீதியாக ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ளமுடியும். தென் இந்தியச் சினிமாக்கள் மக்களை உள்ளீர்ப்பது போல், ஈழத்துத் திரைப்படங்களோ, புலம் பெயர்ந்தவர்களின் தமிழ்த் திரைப்படங்களோ மையம் கொள்வதில்லை. மக்களிடையே வரவேற்பைப் பெறுவதும் மிகக்குறைவு என்றே கூறவேண்டும். இதற்குப் பலர் பல்வேறு காரணங்களை முன்வைக்கின்றன அவர்களது தேவை விருப்பங்களுடன் ஒன்றிக்கிறது.

கனடாவிலுள்ள புலம் பெயர்ந்த ஈழத்தமிழரான வைரமுத்து திவ்வியராஜனின் பெருமுயற்சியால் "சகா" என்ற தமிழ்த் திரைப்படம் வெளிவந்துள்ளது. கதை, பாடல், இசை, இயக்கத்தினூடாக மிகச் சிறப்பான படத்தை உருவாக்கியுள்ளார். கனடா வாழ் ஈழத்தவர்களின் உண்மைச் சம்பவங்களைத் தழுவியதான இந்தத் திரைப்படத்தின் ஊடாக - உலகத் தமிழர்களைக் கனடாவுக்கு அழைத்துச்செல்லும் ஆபூர்வ முயற்சியில் பெருவெற்றி பெற்றுள்ளார் திவ்வியராஜன் என்பதற்குச் சகாவைப் பார்த்தவர்களின் 'பாராட்டுதல்களே சான்றாகவுள்ளன.

சகாவின் ஊடாக யாழ்ப்பாணத்தவர்களுடன் உரையாட வந்த வரை நேர்காணலுக்காகச் சந்தித்தோம். இயக்குநர் மிக எளிமையாக எந்தவித ஆடம்பரமுமின்றிச் சகா தொடர்பாகப் பகிர்ந்து கொண்ட கருத்துகளை வாசகர்கள்முன்வைக்கிறோம் நேர்காணல் வடிவில்.

**உங்களது சிறு அறிமுகத்துடன் கலைத்துறைப் பிரவேசம் தொடர்பாக...**

எனது இடம் தென்மராட்சியிலுள்ள வரணியென்ற சிற்றூர். வரணி மகாவித்தியாலயத்திலும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்று, பட்ட உயர்கல்வியை கொழும்பு பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து, அபிவிருத்திக் கல்விப் பட்டதாரியானேன். சிறுவயதில் இருந்து கலைத் துறையில் ஈடுபாடு கொண்டமையால் மேடை, வானொலி நாடகங்கள் பலவற்றில் நடித்ததுடன், மூத்த நாடகவியலாளர்களுடன்இணைந்து நாடகப் பயிற்சிப் பட்டறைகளையும்நடத்தி, அதில் பெருவெற்றியும் கண்டேன். "விழிப்பு", "கந்தன் கருணை" போன்ற நாடகங்களை நெறியாள்கை செய்ததுடன், இசை நிகழ்வுகளில் மெல்லிசைப் பாடல், புரட்சிப் பாடல்களையும் பாடிவந்தேன். நீண்டகாலமாக இலங்கை வானொலி, ரூபவாஹினி போன்ற ஊடகங்களில் கலைஞராகப் பங்காற்றினேன்.

இனப்பிரச்சினை காரணமாக இந்தியா சென்று, கலைத்துறை தொடர்பான மேலதிக செயற்பாடுகளைத் தெரிந்து கொண்டேன். 1994 ஆம் ஆண்டு கனடாவுக்குச் சென்று, அங்கு கலைப்பணியாற்றி வருகிறேன். அதில் ஒன்றே சகா.

**சகாவின் உருவாக்கம் பற்றி...**

மனதில் வந்த பெரிய உறுத்தல் தான். உண்மையிலேயே இப்படி ஒரு சம்பவம் நடந்தது. எந்தவித பிரச்சினையுமில்லாத இளைஞர்கள் காரணமின்றிக் கொல்லப்பட்டனர். அசம்பாவிதத்தின் பின்னணி, பாதிக்கப்பட்டவர்களின் மனநிலை, போன்ற தாக்கம் காரணமாகவே இந்தக் கதையை உருவாக்கினேன். கணவனை இழந்த மனைவியின் நெருடல்கள், உறவினர்களிடையேயான தோழமை உணர்வு, பல்லினக் கலாசாரத்துக்கு உட்பட வேண்டிய தேவை, இவை சகா உருவாகப் பெரிதும் துணை நிற்கின்றன. பெரும் போராட்டத்தின் பின் இந்தப் பெரிய பணியை நிறைவேற்றினேன்.

இதில் என்னுடைய உழைப்பிற்கு அப்பால் பங்கு கொண்ட கலைஞர்கள் அனைவரும் மிகத் திறமையாக, அதே நேரம் பூரண ஒத்துழைப்புடன் பங்காற்றினர். கூட்டு முயற்சியின் வெளிப்பாடு என்ற வகையில் என் மனைவி, மகன், மகளின் பங்களிப்பும், ஆதரவும் என் வெற்றிக்குக் காரணமாயின.

**தொடர்ந்து இப்படியான முயற்சிகளில்...**

இன்று பல குறும்படங்கள், முழு நீளப் படங்கள் வெளிவருகின்றன. சில படங்கள் பெருவெற்றி பெறுகின்றன. இதற்கு என்ன காரணம் என்றால் உண்மை பேசுவது. உண்மை அங்கு இருக்கும் போது அது வெற்றி பெறுகிறது. காத்திரமான உண்மைக் கதைகளைப் படம் எடுக்கவுள்ளேன். இருந்தாலும், எல்லாவற்றுக்கும் பொருளாதாரம்... தானே முக்கியம். ஒலிநாடா, இறுவட்டுகள் பலவற்றை வெளியிட்டுள்ளேன். கவிதை, பாடல்களை "அருவி வெளியீடாக" வெளியிட்டேன். அவற்றில்

''குன்றத்துக் குமுறல்'', ''காற்றோடு பேசு", "புலரும் வேளையில்", "வெண்பனிப் பூக்கள்", "குளிரும் நிலவு" போன்ற இறுவட்டுகளையும், "புதுவரலாறு நாம் படைப்போம்'', ''விடியலைத் தேடும் கானல்கள்'', ''ஏரிக்கரை ஓரத்திலே'' போன்ற ஒலி நாடாக்களையும் வெளியிட்டுள்ளதுடன், தொடர்ந்தும் இந்த முயற்சியை மேற்கொள்ளவுள்ளேன்.

**தனிமனித முயற்சி என்ற வகையில் ஏதேனும் சவால்களை...**

இது குழுரீதியாக நிறுவனம் சார்ந்து செய்யவேண்டியது. தனியச் செய்யும் போது பல வழிகளில் இடறல்களை எதிர்நோக்கியபோதும், எனக்கிருந்த பின்புல உதவிகளாக -நடன ஆசிரியையான மனைவி, நடனத்தை முறையாகக் கற்றுள்ள மகள், இசைக்கருவிகளை மிகத் திறமையாக வாசிக்கக் கூடிய மகன் ஆகியோர் உள்ளனர். கனடாவில் "வானம்பாடி", "அக்கினி", இசைக் குழுக்களில் எனது மகன் இசைக் கலைஞராகவுள்ளார். உழைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வந்தவர்களை ஒன்று திரட்டி, ஊதியம் இன்றி அவர்களைப் படப்பிடிப்புக்கு உள்வாங்குவது மிகவும் கடினமானதே.

காட்சியின் தொடர்ச்சியை தொடராக எடுக்க முடியாது. ஒவ்வொரு காட்சியாகப் படமாக்கப்பட்டபோதும், கலைஞர்களின் அர்ப்பணிப்பு நினைவு கூரப்படவேண்டியது. ஒவ்வொரு காட்சியும் படமாக்கும் போதே கலைஞர் களுக்குக் காட்சி தொடர்பாக விபரிக்கப்படும். கடைசி நேரக்காட்சியைப் படமாக்க நான்கு பேர்வரவில்லை. அவர்களைத் தேடிப்பிடித்து, வேலைத்தளங்களில் இருந்து அழைத்துவர வேண்டியதாகப் போய்விட்டது. இருந்தாலும், விடயத்தை உள்வாங்கி, உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நீங்களே பார்த்திருப்பீர்கள்.

**இந்தப் படம் உலகத் தமிழர்களிடையே எந்தளவு முக்கியம் பெறுமென...**

புலம் பெயர்ந்தவர்கள் என்ன செய்கிறார்கள், அவர்கள் நடந்து கொள்ளும் விதம் என்ன என்பது எங்களில் பலருக்குத் தெரியாது. இவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் - காசு எவ்வாறு ஒழுங்காக வருகிறது என்பதையும், புகைப் படங்களில் எவ்வாறு உள்ளனர் என்பதையுமே அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், நேர்மாறான செயற்பாடுகள் அங்குள்ளது என்பதை விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

பல கலாசார நாடுகளைச் சேர்ந்தவர்களின் நெருக்கங்களுக்கு உட்பட்டவர்கள் அவற்றைப் பின்பற்றுகிறார்கள். நான் அவற்றைப்பிழை என்று சொல்லவில்லை. அநேகர் தமிழ் கதைப்பதில்லை. நாங்களும் இப்படியே விட்டால், தமிழ் கதைப்பது இல்லாமல் போய், ஆங்கிலம் பேசும் தமிழர்களாக புலம் பெயர்ந்தவர்கள் மாறுவார்கள். இனிவரும் காலங்களில் -மொழியை, கலாசாரத்தை, பண்பாட்டை, இனத்தைத் தூய்மையாகப் பேணக்கூடிய வகையில் செயற்பட வேண்டும். இதற்குக் கலைவடிவங்கள் தான் துணைபுரியும் என்ற நம்பிக்கையுண்டு.

**தென் இந்திய, ஈழத்துத் திரைப்படங்கள் தொடர்பாக...**

எங்களுடைய படங்களில் நாங்கள் பேசுகின்ற மொழி வேறாக இருக்கிறது. இந்தியப் படங்களில் மாறுதல்கள் இருக்கின்றன. இந்த மொழிப் பிரச்சினை அதாவது எங்களுடைய மொழியே எங்களுக்கு அந்நியமாகப் போய்விட்டது. இவற்றை நிவர்த்திசெய்ய நாங்கள் தொடர்ச்சியான வெளியீடுகளை மேற் கொள்ள வேண்டும். அப்போது மொழிப்பரிச்சயம் ஏற்படும். ''நிர்மலா, குத்துவிளக்கு, வாடைக்காற்று" போன்ற அருமையான படங்கள் எம்மவர்களால் வெளியிடப்பட்டன. ஆனால், இப்படியான படைப்புகள் இடைநிறுத்தப்பட்டு மிகநீண்ட காலமாகப் போய் விட்டது.

இதைவிட தமிழீழ விடுதலைப்புலிகளால் பல திரைப்படங்கள் போராளிகளினது, மக்களினது உண்மைச் சம்பவங்களைத் தாங்கியதாக வெளிவந்தன. இவை எதிர்கால வரலாற்று ஆவணமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. தென்னிந்தியத் திரைப்படங்கள் வர்த்தகத்தை நோக்கமாகக்கொண்டு, கனவுலகில் ரசிகர்களை மிதக்கவைப்பதுடன், பெண்களை இழிவுபடுத்தியும் வருகின்றன. எமது அடையாளங்களைப் பிரதிபலிக்கக்கூடியதான படங்கள் வரும் போது அவற்றில் எம்மவர்களை ஈடுபடுத்த/ஈர்க்க முடியும்.

**துறைசார்ந்தவர்களுக்கு நீங்கள் கூறுவது...**

உலகத் தமிழர்களில் ஈழத்தமிழர்களுக்கென்று ஒரு தனித்துவம் உண்டு. நாம் எமக்கான பாரம்பரியத்துக்குள் வாழப் பழகியுள்ளோம். திரைப்படத் துறை அதிநவீனமானது. மிகவும் சக்தி வாய்ந்தது. திரைப்படத்துறையை ஈழத்தவர்கள் முழுமையாக உள்வாங்கவில்லையே என்ற ஆதங்கம் எனக்கு இருக்கிறது. இவற்றைத் தாயகத்திலும், வெளியிலும் செய்ய வேண்டும். இவற்றைச் செய்தால், இனிவரும் சந்ததியினர், எம்மவர்கள் இப்படி இருந்திருக்கிறார்கள் என்பதை வரலாற்று ரீதியாக உணரமுடியும்.

புலம்பெயர்ந்தவர்கள் மட்டுமன்றி, ஈழத்தவர்களின் சாதனைகள், வேதனைகள் என அனைத்தையும் திரைப்படத்திற்குள்ளாகக் கொண்டுவரவேண்டும் என்பதே என்னுடைய விருப்பமாக உள்ளது.

இவ்வாறு தனது கருத்துகளை நிறைவு செய்தார் திவ்வியராஜன்

திரைக்கதை, வசனம், பாடல்கள், இசை வழங்கி சகாவை இயக்கியவர் திவ்வியராஜன். சகாவை அலங்கரித்தவர்களில் கே.எஸ்.பாலச்சந்திரன், கல்வியங்காடு கனகலிங்கம், குரும்பசிட்டி இராஜரட்ணம், உலகநாதன், ஸ்ரீமுருகன், வதனி, யசோ, பாரத், கீர்த்தனன், தர்சன் போன்ற கலைஞர்கள் முக்கியமானவர்கள். புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள் அங்கு இப்படியா... என்ற கேள்வியை எம்மிடையே தோற்றுவித்த, சகா போன்ற திரைப் படங்கள் காலத்தின் தேவையாகவுள்ளது.

ஒவ்வொரு ஈழத்தவர்களும் இப்படியான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டியது எமக்கு மட்டுமன்றி, எம் எதிர்காலத்துக்கே பயனுள்ளதாக அமையும்.

**ஈழவன்**

# நியூயோர்க் நகரமும் எதிர்காலத்தில் பெரும் சூறாவளித் தாக்குதலுக்கு இலக்காகலாம்!

## தற்காப்புக்குத் தயாராகின்றனர் அமெரிக்க மக்கள்



வொஷிங்ரன் —

அமெரிக்காவில் கத்ரீனா சூறாவளியால் நியூ ஓர்லியன்ஸ் நகரம் சீரழிந்தது போல், நியூயோர்க் நகரமும் எதிர்காலத்தில் சூறாவளியால் தாக்கப்படலாம் என்றும் இதனால், பல ஆயிரம் கோடி இழப்பு ஏற்படலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

அமெரிக்காவில் கத்ரீனா சூறாவளி பாதிப்பு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் இது போன்ற இயற்கைச் சீரழிவு ஏற்பட்டால் எந்த வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது குறித்து பல வகையான கருத்துக்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் அரசில் அவசரகால மேலாண்மை நிறுவன இயக்குநராக இருந்த ஜேம்ஸ் லீ விட் என்பவர் புதிய அமைப்பை ஏற்படுத்தியுள்ளார். எதிர்காலத்தில் கத்ரீனா போன்ற சூறாவளிகள் தாக்கினால் அதனை எதிர்கொள்வது எப்படி என்ற பிரசாரத்தை அவர் மேற்கொண்டு வருகிறார்.

இந்தப் பிரச்சினை குறித்து ஜேம்ஸ் லீ விட் கூறியதாவது –

கடந்த 1938 ஆம் ஆண்டு ஆக்ரோஷமான சூறாவளி வீசியது. நியூயோர்க் நகரிலுள்ள மன்ஹாட்டன் பகுதி அப்போது தப்பிவிட்டது. இருப்பினும் சூறாவளி தாக்கியதில் 700 பேர் இறந்தனர். பெருமளவு சேதம் ஏற்பட்டது.

எதிர்காலத்தில் இதேபோன்றதொரு சூறாவளி ஏற்படலாம். அப்போது நியூயோர்க் நகரமும், மன்ஹாட்டன் பகுதியும் தப்பமுடியாது. சூறாவளி தாக்கினால் மன்ஹாட்டன் பகுதி மிதக்கும். நியூயோர்க் நகரில் கடுமையான சேதம் ஏற்பட்டுவிடும். இதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும்.

இதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பில் காப்புறுதி நிறுவனங்களும் இடம்பெற்றுள்ளன. இந்த நிறுவனங்கள் பேரழிவு நிதியம் ஒன்றை உருவாக்கும். இந்த நிதியை ஆபத்துக் காலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கலாம். நியூயோர்க் நகரில் மக்கள் தொகை அதிகமாக உள்ளது. எனவே பாதிப்பு ஏற்பட்டால் அதன் விளைவு கடுமையானதாகவே இருக்கும் என ஜேம்ஸ் லீ விட் தெரிவித்தார்.

கிரேட்டர் ஹரிக்கன் 1938 என்ற புத்தகத்தை எழுதிய செரிபர்ன்ஸ் என்ற பெண் எழுத்தாளர் கூறுகையில் –

1938 ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியால் கடும் பாதிப்பு ஏற்பட்டது. சூறாவளி வரப்போகிறது என்பதை எச்சரிக்கை செய்யக்கூடிய சாதனங்கள் அப்போது இல்லை. தற்போது சூறாவளி தாக்குதலை முன்கூட்டியே உணரக்கூடிய அளவுக்கு நவீன சாதனங்கள் வந்துவிட்டன. இவற்றைப் பயன்படுத்தி முன்னெச்சரிக்கையாக இருந் தாலும், பாதிப்பு என்பது கடுமையானதாகவே இருக்கும் எனத் தெரிவித்தார்.

# அமெரிக்காவை மிரட்டும் மற்றொரு புயல் ரீட்டா!



AFP

வொஷிங்ரன் —

அமெரிக்காவின் புளோரிடா, லூசியானா, மிசிசிபி, அலபாமா ஆகிய மாநிலங்களைக் கத்ரீனா என்ற புயல் தாக்கியது. நியூ ஓர்லி யன்ஸ் பகுதியில் பேரழிவை ஏற்படுத்திய இந்தப் புயலுக்கு ஆயிரக்கணக் கானவர்கள் பலியாகி விட்டனர்.

இந்தச் சோகத்தில் இருந்து அமெரிக்க மக்கள் மீளாத நிலையில் புளோ ரிடா மற்றும் நியூ ஓர்லியன்ஸ் பகுதிகளை இன்னொரு புயல் மிரட்டி வருகிறது.

புளோரிடாவுக்கு தென் கிழக்கு அட்லாண்டிக் கடல் பகுதியில் உருவாகியுள்ள இந்தப் புயலுக்கு ரீட்டா என்று பெயரிட்டுள்ளனர்.

இந்தப் புயல் கியூபாவின் ஹவானா நகரில் கரையைக் கடந்து அங்கு பேரழிவை ஏற்படுத்தியது. இப்போது அங்கு பலத்த காற்றுடன் கனமழை பெய்துவருகிறது.

இப்போது அந்தப் புயல் அமெரிக்காவின் புளோரிடாவை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இது லூசியானாவின் நியூ ஓர்லியன்ஸ் பகுதியைக் கடுமையாகத் தாக்கும் அபாயமுள்ளது.

மணிக்கு 100 மைல் வேகத்தில் பலத்த காற்று வீசும். அப்போது மரங்கள் வேருடன் சாயும். கடல் ஏற்கனவே கொந்தளிப்பாக உள்ளது. புயல் தாக்கும்போது 9 மீற்றர் உயரத்துக்குமேல் ராட்சத அலைகள் வீசிக் கரையைத் தாக்கும்.

புயல் ஆபத்து ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து ராணுவம் உஷார்படுத்தப்பட்டுள்ளது. தாழ்வான பகுதிகளில் உள்ளவர்கள் பாதுகாப்பான இடத்துக்கு வெளியேற்றப்பட்டு வருகின்றனர். லட்சக்கணக்கானவர்கள் ஏற்கனவே வெளியேறிவிட்டனர். ஆயிரக்கணக்கான கார்களில் வெளியூர்களுக்கு மக்கள் சென்ற வண்ணமுள்ளனர். அமெரிக்காவை சமீப காலமாகத் தாக்கும் 17 ஆவது புயல் இதுவாகும்.

# 10 வயது சிறுமிக்கு பெண் குழந்தை!

சுவிற்சர்லாந்து —

சுவிற்சர்லாந்தில் இருக்கும் கமரூன் நாட்டைச் சேர்ந்த 10 வயதுச் சிறுமிக்குப் பெண் குழந்தை பிறந்துள்ளது. அந்தச் சிறுமி குழந்தை பெறக் காரணமாக இருந்த நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

சந்தேகத்தின்பேரில் அந்தச் சிறுமியின் தாயாரின் 68 வயதுக் காதலனை ரி.என்.ஏ. பரிசோதனை செய்து பார்த்ததில் அவர் இல்லை என்பது தெரிந்தது.

எனினும் இவருக்கும் அந்தச் சிறுமிக்கும் பாலியல் உறவு இருந்திருக்கிறது. தற்போது அந்தச் சிறுமி ஒரு காப்பகத்தில் விடப்பட்டிருக்கிறார். அந்தச் சிறுமியின் தாயார் சுவிற்சர்லாந்தில் திருமணம் செய்திருந்ததால் சிறுமியையும் சுவிற்சர்லாந்துக்கு அழைத்து வந்துள்ளார்.

# அல்கொய்டாவின் பயிற்சி முகாம்கள் ஈராக்கில் உள்ளதாக ஐ.நா. தகவல்!

காபூல் —

ஆப்கானிஸ்தானில் செல்வாக்கிழந்த அல் – கொய்டா கிளர்ச்சிவாதிகள் ஈராக்கில் ஊடுருவி புதிய பயிற்சி முகாம்களை அமைத்து வருகின்றனர். இதனால், தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரிக்கும் அபாயம் உள்ளது என ஐ.நா. பாதுகாப்புச் சபை ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அல் – கொய்டா, தலிபான் உட்பட்ட தீவிரவாத இயக்கங்கள் பற்றி ஆய்வு செய்ய பிரிட்டன் நிபுணர் ரிச்சர்ட் பேரட் தலைமையில் ஐ.நா.பாதுகாப்புச் சபையில் அமைக்கப்பட்ட குழுவின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

ஆப்கானிஸ்தானில் செயற்பட்டு வந்த அல் – கொய்டா மற்றும் தலிபான்களின் செல்வாக்கு சரிந்துள்ளது. அங்கிருந்து பயிற்சி முகாம்கள் ஈராக்கிற்கு இடம்பெயர்ந்துள்ளன. பல்வேறு நாடுகளில் இருந்து புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பலர் அங்கு பயிற்சிக்குச் செல்கின்றனர். அவர்கள் தாய்நாடு திரும்பியதும் எதிர்காலத்தில் தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரிக்கும் அபாயம் உள்ளது.



ஈராக்கில் புகுந்துள்ள தீவிரவாதிகள் அங்கேயே அழிக்கப்படவேண்டும். அவர்கள் மீண்டும் தாய் நாடு திரும்ப அனுமதிக்கக் கூடாது என்ற கருத்தை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அடிக்கடி வலியுறுத்தி வருகிறார். இது வரவேற்கத்தக்கது.

தீவிரவாத குழுக்களின் தொடர்பு, பயிற்சி முகாம், பயிற்சி முறை, நிதிப்பரிமாற்றம் உட்படப் பல்வேறு விரிவான விவரங்களும் இந்த அறிக்கையில் இடம்பெற்றுள் ளன.

ஜோர்தான் நாட்டைச் சேர்ந்த அபு முசாப் அல் – சர்காவி தற்போது ஈராக் நாட்டில் அல் – கொய்டா தலைவராக இருந்து வருகிறார். இது ஒசாமா பின்லேடனுக்கு நன்மை அளிப்பதாக உள்ளது. ஈராக்கில் பயிற்சி பெறுவோரின் புதிய வரவால் உலக நாடுகளுக்கு தீவிரவாதிகளின் தாக்குதல் அபாயம் அதிகரித்து வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் அல் – கொய்டா தலைவராகவுள்ள அபுமுசாப் அல் – சர்காவி கூறுகையில் –

ஈராக்கின் வட பகுதியில் அமெரிக்க ஆதிக்கத்தை எதிர்க்கும் ஷியா பிரிவு தலைவரான முக்ததா அல் – சதார் தலைமையிலான குழுவினரை நாங்கள் தாக்கமாட்டோம். அவர்கள் அமெரிக்கர்களுக்கு உதவும் குழுக்கள் அல்ல.

ஷியா மற்றும் குர்திஷ் இனக் குழுக்களில் ஆறு குழுக்கள் மட்டுமே அமெரிக்கர்களுக்கு உதவுகின்றன. அவர்களை மட்டுமே நாங்கள் தாக்குவோம் எனத் தெரிவித்துள்ளார்.




# ஈராக்கிய படைப் பிரிவுக்குள் கிளர்ச்சிவாதிகள் ஊடுருவல்!

## பாதுகாப்பு ஆலோசகர் தெரிவிப்பு

பாக்தாத் —

ஈராக்கின் பாதுகாப்புப் படைப் பிரிவுக்குள் கிளர்ச்சிவாதிகள் ஊடுவியுள்ளதாக ஈராக்கின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் முவாபாக் அல்-றூபாமி தெரிவித்தார்.

படைப்பிரிவிற்குள் எவ்வளவு கிளர்ச்சிவாதிகள் ஊடுவியுள்ளனர் என்ற விபரம் தனக்குத் தெரியாதெனவும், எனினும் ஈராக்கின் பல் வேறு பகுதிகளிலும் பிரச்சினைகள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஈராக் படைப்பிரிவுக்குள் கிளர்ச்சிவாதிகள் ஊருடுவியுள்ளமையா னது மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளதாக பஸ்ராவிலுள்ள கூட்டுப் படைகளின் பிரதம அதிகாரி கேணல் பில் டுன்காம் தெரிவித்தார்.

ஈராக்கிய பொலிஸ் பிரிவிற்குள் ஊடுவியுள்ள கிளர்ச்சிவாதிகளை களையெடுத்து சிறந்ததொரு பொலிஸ் கட்டமைப்பை உருவாக்க வேண்டுமென ஈராக் அதிகாரிகளிடம் கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஈராக் பொலிஸாரால் பிடிக்கப்பட்ட இரண்டு படையினரை, பலத்தைப் பிரயோகித்து பிரிட்டன் படையினர் விடுவித்ததையடுத்து பஸ்ரா நகரில் மக்களுக்கும், பிரிட்டன் படையினருக்குமிடையே ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தணிப்பது தொடர்பாக பிரிட்டனின் பிரதம பாதுகாப்பு அதிகாரி ஜோன் றீட், ஈராக் பிரதமர் இப்ராகிம் ஜபாரியை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

# மணிப்பூர் மாநில தாக்குதல்; 14 இந்தியப் படையினர் பலி!


புதுடெல்கி —

இந்தியாவின் வட கிழக்கு மாநிலமான மணிப்பூரில் கிளர்ச்சிவாத சந்தேக நபர்கள் நடத்திய பதுங்கித் தாக்குதலில் 14 படையினர் கொல்லப்பட்டனர்.

மணிப்பூர் மாநிலத்தில் கூர்க்கா படையினர் வீதியோர பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலை யார் நடத்தியது என எவரும் உரிமை கோரவில்லை. எனினும் மணிப்பூர் மக்கள் விடுதலை முன்னணி என்ற அமைப்பு இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாமென தாம் நம்புவதாக இந்திய புலனாய்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வருட ஆரம்பத்திலிருந்து இந்தியப் படையினர், கிளர்ச்சிவாதிகளுக்கெதிராக பாரிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், தமது முகாம்கள் அனைத்தும் பாதுகாப்பாக உள்ளதாகவும், தாம் போரிடுவதற்கான தகுதியுடனேயே உள்ளதாகவும் கிளர்ச்சிவாதிகள் தெரிவித்துள்ளனர்.



நமது ஈழநாடு
The Namatha Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வடக்கு - கிழக்கிலிருந்து படையினரை விலக்கக் கோருகின்றார் விஜேடயஸ்!

கொழும்பு —

**நாட்டில் கொழுந்து விட்டெரியும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிரந்தரமான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க இலங்கையில் சிறீலங்கா - தமிழீழம் சோசலிச ஜனநாயக அரசாங்கமொன்று ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று சோசலிச சமத்துவக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் விஜே டயஸ் தெரிவித்தார்.**

கொழும்பு நிப்போன் விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேல் நாட்டில் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு இன்றுவரை தீர்வு காணப்படவில்லை. ஆட்சியில் இருந்த மற்றும் ஆட்சி நடத்திய அரசியல் கட்சிகளுக்குத் துணைபோன மற்றும் முண்டுகொடுத்தவர்கள் முதலாளித்துவக் கொள்கைகளையே முன்னெடுத்துச் சென்றனர்.

இதன் விளைவாக நாடு இன்று படுபாதாளத்தில் தள்ளப்பட்டு பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு விடயங்களில் சீர்கெட்டுப்போயுள்ளது. அத்துடன், முதலாளித்துவக் கொள்கைகளைக் கொண்ட பன்னாட்டு அழுத்தங்கள் எம்மை ஆட்டிப்படைக்கும் அளவில் ஊடுருவியுள்ளன. முதலாளித்துவக் கொள்கைகளை அடியோடு ஒழித்துக்கட்டி சமத்துவமான முற்போக்கு சிந்தனைகளுடன் கூடிய புரட்சிகர செயற்திட்டங்கள் எம்மிடம் உள்ளன.

அது நாடு பிளவுபடுவதை - பிரிவினையைத் தடுக்கிறது. சகலருக்கும் சகலவற்றிலும் சம இடமும் சமவாய்ப்பும் அது பெற்றுக்கொடுக்கிறது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டிருக்கும் படையினரை விலகச்சொல்லி வலியுறுத்தியும் தமிழர்களின் தன்னாட்சி உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவும், போருக்கு முடிவு காணவும், தலையீடுகள் இல்லாத சுமுகத் தீர்வுகளுக்கும் அது வழி வகுக்கிறது என்று குறிப்பிட்டார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் எம்.அரவிந்தன், திலானி பீரிஸ், விக்கிரமசிங்க ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துக்களை முன் வைத்தனர்.

## அவசரகால சட்ட மசோதா...

அவசரகாலச் சட்டத்தின் பெயரால் இராணுவத்தால் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படும் நிலையிலும், தமது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையும் அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவளிப்பதை தி.மகேஸ்வரன் வன்மையாகக் கண்டித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற பிரதம கொறடா மகிந்த சமரசிங்க, இந்த சட்ட நீடிப்பு மசோதா மீது பேச மகேஸ்வரனுக்கு சபாநாயகர் லொக்கு பண்டார நேரம் ஒதுக்கவில்லை என்று கூறினார்.

இதனிடையே ஜே.வி.பிக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் ஐந்து நிமிட நேரத்தை மகேஸ்வரனுக்கு ஒதுக்குவதாக அதன் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ச கூறியதற்கு மகிந்த சமரசிங்க ஆட்சேபம் தெரிவித்தார்.

இந்த நிலையில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்னசிறி விக்கிரமநாயக்க முன்பாக வைக்கப்பட்டிருந்த அவசரகாலச் சட்டநீடிப்பு மசோதாவையும், பாதுகாப்பு அமைச்சின் ஆவணங்களையும் மகேஸ்வரன் கிழித்தெறிந்துவிட்டு வெளியேறினார்.

மகேஸ்வனின் இந்த செயலுக்கு ஆளும் கட்சி உறுப்பினர் ரோகித அபயகுணவர்த்தன கண்டனம் தெரிவித்தார். இதனால் அவையில் சலசலப்பு ஏற்பட்டது. சிறிதுநேரம் கழித்து மகேஸ்வரன் மீண்டும் தனது ஆசனத்தில் அமர்ந்தார். விவாதம் தொடர்ந்து நடைபெற்றது.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில் -

நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற அவசரகால நீடிப்பு விவாதத்தின்போது அவசரகாலச் சட்டத்தால் தமிழ் மக்கள் அடையும் இன்னல்களை விவரித்து எடுத்துக் கூறினேன்.

அத்தோடு அவசரகால சட்ட விவாதத்தின் போது உரையாற்றுவதற்கு சபாநாயகர் அனுமதி அளிக்கவில்லை.

இந்த அவசரகாலச் சட்டத்தால் தமிழ் மக்கள் மாத்திரம் பொலிஸ் பதிவுகளுக்குள்ளாகி வருகின்றனர்.

இதனால் இந்த அவசர காலச் சட்டத்தை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம் என்று கூறிவிட்டு - அவசரகாலச் சட்டமூலம், பொலிஸாரால் கொழும்பில் தமிழ் மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அனைத்தையும் பாதுகாப்பு அமைச்சின் முன்னால் கிழித்து வீசியதாகத் தெரிவித்தார்.

## அரசாங்கத்துக்கு ...

எட்டுக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த ஹர்த்தாலுக்கு திருகோணமலை பொங்கு தமிழ் ஏற்பாட்டுக்குழு அழைப்பு விடுத்திருந்தது.

இந்த ஹர்த்தாலால் - அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், மாகாண கல்வி அமைச்சு, வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றுக்கு ஊழியர்கள் செல்லாததை அடுத்து அவை வெறிச்சோடிக் கிடந்தன.

அரச மற்றும் தனியார் பஸ் சேவைகள் இடைநிறுத்தப்பட்டதுடன் வீதிகள் சனநடமாட்டமின்றிக் காணப்பட்டன. வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

தமிழ், முஸ்லிம் பாடசாலைகளும் இயங்கவில்லை. அத்துடன், மணிக்கூட்டுக்கோபுரத்துக்கு சமீபமாகவுள்ள சிங்கள மத்திய மகாவித்தியாலயம் மற்றும் நகரில் அமைந்துள்ள இராஜஜீய வித்தியாலோக பாடசாலை ஆகியன மாணவர்கள், ஆசிரியர்களின் வரவின்மையால் மூடப்பட்டிருந்தன.

தமிழ், முஸ்லிம் மீனவர்கள் எவரும் கடலுக்குச் செல்லவில்லை. எனினும், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்குச் சென்றபோது கடலில் வைத்து கடற்படையினரால் திருப்பி அனுப் பப்பட்டனர்.

பிரதான சந்திகள், நகரின் மையப் பகுதிகளில் இராணுவத்தினரும், பொலிஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை - இராணுவத்தினரதும் அவர்களுடன் இணைந்து செயற்படும் ஆயுதக்குழுவினரதும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட ஹர்த்தால் முழு அளவில் வெற்றியளித்துள்ளதாக பொங்கு தமிழ் ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்தனர். (04-10)

## மதமாற்றச்...

இளம் பிக்குகள் ஊர்வலமாக வந்ததுடன் - பௌத்த கொடியையும், இலங்கையின் தேசியக் கொடியையும் ஏந்தியவாறு பாரம்பரிய வாத்திய இசையை முழங்கியபடி வந்தனர். இதன்பின் பிக்குகள் அனைவரும் மாலை 4 மணியளவில் மத வழிபாட்டில் ஈடுபட்டனர்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்தவர்கள் - எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மதமாற்றச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்தினர்.

மதமாற்றத்தில் ஈடுபடும் கிறிஸ்தவ அமைப்புகள் தொடர்பாகவும், ஜாதிக ஹெல உறுமயவால் அமெரிக்கத் தூதரகத்துக்குக் கடிதமொன்றும் அனுப்பப்பட்டது.

அதில் அடிப்படைவாத கிறிஸ்தவக் குழுக்கள் சமூக வேலையெனப் பாசாங்கு காட்டி மிகவும் வறிய நிலையிலுள்ள பௌத்தர்களை தமது மதத்துக்குச் சேர்க்கின்றனர். அத்துடன், இந்த அடிப்படைவாதிகள் பணம் மற்றும் ஏனைய பொருளுதவிகளை வறுமைக்கோட்டுக்குள் உள்ள மக்களுக்குக் கொடுத்து அவர்களை மதம் மாற்றுவதுடன், கிறிஸ்தவ தேவாலயங்களையும் அமைத்து வருகின்றனர். எனினும், இலங்கை 70 சதவீதம் பௌத்தர்களைக் கொண்ட ஒரு பௌத்த நாடு.

இலங்கை அரசியலமைப்பின் 9 ஆவது பிரிவின்படி இலங்கை ஒரு பௌத்த நாடு என்று தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. இதனால் பௌத்த மத பாதுகாப்புக்குள் ஏனைய சிறுபான்மை மதங்களுக்கும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்தது. (முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## அவசர...

மனோ கணேசன் மற்றும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திர சேகரன், பி.இராதாகிருஷ்ணன் ஆகியோரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

இதன்படி பிரேரணைக்கு ஆதரவாக 118 வாக்குகளும் எதிராக 24 வாக்குகளும் கிடைத்தன.

## இராணுவ...

வந்த இரண்டுபேர் இந்தத் தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தில் ஆர்.எம்.எஸ்.சந்தன, ஏ.எம்.அதிகாரி, எச்.எ.அஜித்குமார ஆகிய இராணுவச் சிப்பாய்களும் - சோமசிறி என்ற பொலிஸ் கொன்டபிளும் படுகாயமடைந்தனர்.

இவர்கள் சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சமபவத்தையடுத்து அப்பகுதியில் படையினர் சுமார் 10 நிமிடங்கள்வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரியவருகிறது.

## நடத்துனர் தாக்கப்பட்டதால் வடமராட்சி மினிபஸ்சேவை முற்றாக செயலிழப்பு

யாழ் - பருத்தித்துறை பயணிகள் சேவையில் ஈடுபட்டிருந்த மினிபஸ் நடத்துநர் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும், தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனக்கோரியும் வடமராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதனால் 750, 751 ஆகிய இலக்கப் பாதையூடான மினிபஸ் போக்குவரத்துக்கள் இடம்பெறவில்லை.

நேற்றுக்காலை 9 மணியிலிருந்து பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற மினிபஸ் நடத்துநருக்கும் இன்னொரு மினிபஸ்சின் நடத்துநருக்குமிடையில் பயணிகளை ஏற்றுவதில் ஏற்பட்டுள்ள வாய்த்தகராறு கைகலப்பாக மாறியதில் பருத்தித்துறையிலிருந்து சென்ற மினிபஸ் நடத்துனர் தாக்கப்பட்டார்.

இதனால் ஆத்தரமடைந்த வடமராட்சி சிற்றூர்தி சங்கத்தின் சாரதிகள், நடத்துநர்கள் தமது நடத்துநர் தாக்கப்பட்டதை கண்டித்தும், இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதுடன் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனக் கோரியும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். (12), (14)

## பலாலிக்குள்..

போயிருப்பதாகவும் இது பாதுகாப்புத் தரப்புச் சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

விடுதலைப் புலி உறுப்பினர்கள் பல்வேறு வழிகளில் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் நுழைந்து இராணுவத்தினர் மீது தாக்குதலை நடத்தி இராணுவத்தினரை மனோ ரீதியாகப் பின்னடைவிற்கு உட்படுத்த முயல்வதாக உளவுப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

அத்துடன் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பாதுகாப்பான வீடுகளில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை வைத்திருப்பதாகவும் புலனாய்வுப் பிரிவுத் தகவல் தெரிவித்துள்ளது.

## கல்மடு...

க.விஜயகுமார் (வயது 18) ஆகியோர் காயமடைந்தனர்.

வழமைபோல் தனது மோட்டார் சைக்கிளில் வெளியே சென்று விநாயகபுரத்திலுள்ள வீட்டிற்குத் திரும்பிய அவர், அருகிலுள்ள கடையொன்றிற்கு முன்பாக அயலவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தபோது மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் கைக்குண்டை வீசியதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்துவிட்டுத் தப்பிச் சென்றனர் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, வாழைச்சேனை விபுலானந்த வீதியில் நேற்று மாலை குப்பைக்குள் கிடந்த கைக்குண்டு வெடித்ததில் 10 வயதுச் சிறுவனான கே.வினோத்குமார் காயமடைந்து வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குப்பை எரிக்கப்பட்டபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## அடுத்த பாய்ச்சலுக்குத் தயாராகி...

கட்டமைப்பை சிதைத்திருக் கிறார்கள். இதற்கு மாறாக ஒரு வீறுநடை போடக்கூடிய அளவுக்கு விடுதலை இயக்கம் வளர்க்கப்பட்டுள்ளதென்று சொன்னால் அது எங்குமில்லை.

எல்லா இடங்களிலும் யுத்தநிறுத்தம் -நீண்டகாலப் போர் ஓய்ந்து போராடுகின்ற விடுதலை இயக்கங்களைச் சிதைத்திருக்கின்றதேயொழிய வீச்சாக்கியதில்லை.

இன்று எமது தேசியத் தலைவரது தீர்க்க தரிசனத்தில் நீண்டதொரு பார்வை யில் போராட்டத்தின் ஒவ்வொரு அசைவுகளும் பார்க்கப்பட்டுக் கொண்டிருப்பதால் தான் நாங்கள் இவற்றுக்கு விதிவிலக்காக ஒரு வீச்சோடு இருக்கிறோம்.

இந்த வீச்சு - வீச்சாக இருக்க வேண்டும். உண்மையில் தென்னிலங்கையில் ஏற்படுகின்ற குழப்பங்கள் - தற்போதைய அவசரகால நிலைகளும் அந்த அவசரகால நிலைகளுக்கூடாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற நிழல் யுத்தங்களும் ஆட்சி மாறும் போது அமைதிக்குத் திரும்பலாம்.

அமைதிக்குத் திரும்பி, போராட்டத்தைச்சிதைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கலாம். ஆனால், எதுவுமே எங்களுடைய இலட்சியத்தை வென்றெடுப்பதற்கு உதவப் போவது கிடையாது.

திலீபனுடைய 5 ஆம் நாள்.... நினைவு மங்கிய நேரம் பேசமுடியாது சுருண்டு நல்லூர் வீதியில் போடப்பட்டிருந்த பந்தலில் படுத்திருந்த நாள்.... 18 ஆண்டுகள். இவற்றையெல்லாம் மீட்டுப்பார்ப்போமாக இருந்தால் எவ்வளவு காலத்தை நாங்கள் எமது மக்களுடைய உணர்வுகளுக்காக செலவு செய்கிறோம்.

இன்று வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு, யாழ்ப்பாணம் என மக்கள் அலையலையாய் திரண்டு, தமிழீழம்தான் எங்களின் மூச்சு. தமிழீழத்தை அடைவதற்காக ஆயுதங்களைத் தூக்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என ஒருமித்த குரலில் உத்வேகத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கும் நேரம்.

இந்தக் காலத்தில் எதையும் எதிர்கொள்ளக்கூடிய நிலையில் நாம் தயாராக இருக்க வேண்டும்.

நாங்கள் இதுவரை குறைந்தளவு கடற்கலங்களையே வைத்துக் கொண்டு சண்டைகளில் ஈடுபட்டு வந்துள்ளோம். ஆனால், இப்போது பல துறைகளாகப் பிரிக்கப்பட்டு - பல கடற்படை அலகுகளாக வளர்க்கப்பட்டு கடும் யுத்தத்தை எதிர்கொள்ளக் கூடிய அளவுக்கு கடற்போர் வழிமுறைகளைக் கற்றுக்கொண்டு அடுத்த பாய்ச்சலுக்கு தயாராகி யிருக்கிறோம்.

நாங்கள் இதுவரை காலமும் எத்தனையோ நெருக்கடிகளுக்கு மத்தியில் - எத் தனையோ சூழலுக்கு மத்தியில் - வீரச்சாவடைந்த தளபதிகள், போராளிகளின் தியாகங்களுக்கு மத்தியில் வளர்ச்சி பெற்றுள்ளோம்.

எனவே, 70 ஆயிரம் மக்களின் உயிரிழப்போடும் தொடர்ந்துகொண்டிருக்கும் இந்த விடுதலைப் போரை முடிக்கவேண்டிய பொறுப்பு எமக்குண்டு.

1984 ஆண்டு தொடக்கம் 1991 ஆம் ஆண்டுவரை விடுதலைப் புலிகளின் கடற்புறா கட்டமைப்பாகவிருந்து 1991 இல் தான் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு இன்றுவரை வளர்ச்சியடைந்து வருகிறது.

இவ்வளவு ஆண்டுகளில் நாங்கள் நிறைவேற்றிய வரலாற்று வெற்றிகளை விட இனிவரும் காலங்களில் செய்யப்படவுள்ள போர் எல்லாவற்றுக்குமான ஓர் இறுதிப்போராக அமையும். நிரந்தரத் தீர்வை எட்டக்கூடிய அடுத்த பாய்ச்சலுக்கான போருக்கு எம்மை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டிய நேரமாகும்.

எனவே, அடுத்த கட்ட நடவடிக்கைக்கு அனைவரும் தயாராக இருக்கவேண்டும் என கேணல் சூசை மேலும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### சின்னட்டி கந்தசாமி

அராலி வீதி சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டி கந்தசாமி அவர்கள் 21.09.2005 அன்று புதன் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (22.09.2005) இன்று வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
சௌந்தர்ராஜன், கோவிந்தராஜன்
(பிள்ளைகள்)

(இ

## அறிவித்தல்

அனைத்து டிப்ளோமா (இசை/நடன)
பட்டதாரிகளையும் சகல ஆவணங்களுடன் இன்று
(22.09.2005) யாழ். கல்வி வலயம் முன்பாக
காலை 9 மணி - 12 மணிக்குள் சமூகமளிக்கும்படி
கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

இப்படிக்கு :
தலைவர் ஜெ.குமுதினி
செயலாளர் ப.இறைமகள்

(2068)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.09.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.